ஓர் ஆங்கில மாதால் எழுதப்பட்ட "எற்றுண்டு போன பெண்" என்ற தலையங்கமமைந்த கட்டுரையில், தூற்றுக்கணக்கான மேலைத் தேசத்துப் பெண்கள் கெட்டுப்போன, உண்மையான, பரிதாபமான, கொடூரமான, சம்பவங்களை விபரித்துள்ளார். அப்படியான சம்பவங்கள் நம் நாட்டில் இல்லாதது என்ன காரணமெனில் நம் சாதியாரின் கட்டுப்பாடு என்றே திண்ணமாகச் சொல்லலாம்.

மாக்ஸ் முல்லர் (Max Muller) எனனும் ஐரோப்பியர் "இந்துக்கள் ஒரு ஞானவான்கள் கொண்ட சாதி" என்று நாமம் சூட்டியுள்ளார். எமது முன்னோர் அநேகம் சாதியாசாரங்களை அக்காலத்தில் யுகமாகவும், சாதுரியமாகவும், முன்யோசனையுடனும், பின் வரும் நன்மைபை நாடி வகுத்துச் சென்றார்கள். அப்படியானவற்றில் ஒன்றுதான் மணக்கட்டுப்பாடும்.

இந்துக்கள் மட்டுமல்லக் கிறீஸ்தவரிலும் அனேகர் தமது பழைய வழக்கங்களை விடாது அநுசரித்து வருவது போற்றத் தக்கது. இம் மணக் கட்டுப்பாடு பெண்களின் மிக விரும்பத் தக்கதும் விலைபதிக்க இயலாததுமான இலக்ஷ்ணங்களை பாதுகாத்து அவைகளை வளர்ச் செய்

யும். தற்காலத்தில் அப்படியான கட்டுப்பாடுகளே பெண்களுக்கு அதிகம் விசேட நற் குணங்களான கபடமில்லாப் பரிசுத்தத்தன்மையையும், களங்கமில்லாப் பதிபக்தியையும் அளிக்கின்றது. இப்படியான கட்டுப்பாடில்லாவிடில் பெண்கள் யாவரும் கெட்டுவிடுவார்களோ என்று தப்பபிப் பிராயம் கொண்டு விடாதீர்கள். ஆண்கள் ஒழுக்க முடையோராகுமட்டும் நம்மவர்க்கு இப்படியான கட்டுப்பாடுகள் அவசியம் என்பதே எமது கொள்கை. உலக அனுபவம் வாய்ந்த நம்முன்னோரின் ஒவ்வொரு கட்டுப்பாட்டின் கருத்தையு முணர்ந்தவர்க்கு, எளிதில் விளங்கும்.

"உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப்பாளர் தம் கொள்கையிற் குன்றார்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்பில் கறிக்குமோ மற்று."

பழைய கொள்கைகளிற் பற்றுள்ளவர்களென்றும் சீர் திருத்தத்திற்கு விரோதிகளென்றும் நம்மை பல நண்பர்கள் சொல்லக் கூடும். நம் சீர்கள் பண்டைக்காலமாய்க் கருநாடகமாக இருக்கின்றனவே, தற்போது வழங்கும் நாகரீகங்களுக்கு ஒத்துவர மாட்டாதே யென எண்ணி அச்சீர்கள் அடியோடே வேரறுக்க வேணுமென்பவர்களுக்கு நாம் விரோதிகள்தான். நம் சீர்களில் அனேகம் நன்மை பயக்கக் கூடியன உள. அவைகள் சீராகவே இருக்கவேண்டும். புராதன வழக்கங்களை மதித்து ஆராய்வதனால் நமது ஆபிவிர்த்திக்கு யாதோர் அபாயமும் நேராது. சில சமயங்களில் அவை நம்மை படுகுழியில் விழுவதினின்று பாதுகாக்கவும் கூடும்.

கலியாணமானது அற்பமான விஷயமல்ல. நம்முடைய நாட்டில் சட்டமும் நியாய ஸ்தலங்களும் ஏற்பட்ட பிறகு எத்தனையோ விவகாரங்கள் நடக்கின்றன ஆனாலும விவாக சம்பந்தமான வழக்குகள் நூற்றுக்கு ஒன்று கூட அரிது என்றே கூறலாம். இதற்குக் காரணம் நமது முன்னோர் வகுத்த சம்பிரதாயம் என்றல் மிகையாகாது.

பெண்ணுரிமை விதவைகளுக்கு வழங்க வேண்டுமென்பதே அக்கட்டுரையின் கருத்தாயின் அது மிகவும் விரும்பத்தக்கதே. இவ்வூரில் விதவைகளான அனேகம் பெண்கள் இவ்விடம் தக்க துணையின்மையால் தம் நாடேகி விடுகின்றனர். சகோதரர், மகன், அல்லது பெற்றோர் முதலிய தக்க துணையுடையோரே இவ்வூரில் தங்குகின்றனர். தக்க பாதுகாப்பாளருடனிருக்கும் இவ்வூர் விதவைச் சகோதரிகளிலும் பார்க்க தாய்நாட்டில் அனாதரவாய் இருக்கும் விதவைகளுக்கு ஓர் ஆச்சிரமம் உண்டுபண்ணி அவர்கள் பொழுது தவப் பொழுதாய் கழிவதற்கு ஏற்றதான ஒரு தொழிற் சாலை போன்ற ஒன்றை ஏற்படுத்தினால் மற்ற தெல்லாவற்றிலும் சிறந்த புண்ணியம் இதுவேயாகும். கற்றோரும் மற்றோரும் இதை நன்றாகச் சிந்திப்பார்களாக

"ஏழை அழுத கண்ணீர் கூறிய வாளொக்கும்" ஆதலால் ஏழைகளின் ஆதரவளித்து அவர்தம் கண்ணீரைத் துடைப்பதே எத்தனையோ கோயில் கட்டுவதிலும் மேலான புண்ணியமாகும்.

* பத்திராதிபர் குறிப்புகள் *

"பெண்ணரசியின் பிரலாபம்" ஆண் மகனது சுயநலத்தன்மையும் பெண்மகளது சுயநலப் பரித்தியாகத்தையும் தெளிவாக விளக்கிக்காட்டும் அருமையாய்ந்த கட்டுரை. இப்படியான மகா கொடூரமான நெஞ்சினர்க்கு மனோவியாக வாய்க்கப்பெற்ற மெல்லியலார் சரித்திரம் மிகப் பரிதாபமானதே. இந்தக் கல்நெஞ்சர் இவையெல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு ஒருவனிருக்கிறானென்பதையாவது, நற்றில் "இறப்பு" என்பது தங்களை அணுகும் என்பதையாவது, மெலியாரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் வாட்டும் என்பதையாவது, சிறிதேனும் எண்ணுவதில்லை.

இடம்பட மெய்ஞ்ஞான்றும் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்காதார்—தடங்கண்
[ணாய்
உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்திடினும்
கைப்பறு பேச்சுரையின் காய்.

என்பது போல் இப்படியான கசடர்க்கு எத்தனை விதமாக உபசாரம் செய்தபோதிலும் அவர் தம்மனம்சரியாகாது. இப்படியானவர் நம்சமூகத்தில் மிகமிகச் சிலரே. இவர்களே நம் சமூகப்பெண்மக்களை இழிவு படுத்தும் சுபாவம் வாய்ந்தவர்கள். இவர்கள் அறிவுடை உலகில் மனுஷராகக் கருதப்படாது, மிலங்கினமாகவே கருதப்படுவர்.

உலகம் மாயை, அதில் மானிடர் வாழ்வும் ஓர் மாயைத் தோற்றமென்பது சாதுக்கள் வாக்கு. இப்படியான மாயவாழ்வில் எத்தனை விவாதங்களும், குரோதங்களும், பிடிவாதங்களும் அகங்காரமும் படக்காட்சிபோல் நாளாந்தம் நிகழ்கின்றன. அவற்றை முற்றற நீக்குபவர் முற்றுந் துறந்தவராயிருந்த போதிலும், மற்றவர் சிறிது சிறிதாகவேனும் இப்படியான பழக்கங்களை நீக்கி மனதைச் சுத்தி செய்யப் பழகிக்கொள்ள வேண்டும்.

கெட்டுப்போகிறவர்களுக்குப் புத்தியைச் சொல்லவேண்டும். கேட்காமல் அவர்கள் ஏசினாலும், அவனது அறிவை நிறுத்துக்கொண்டு மவுனமாக இருந்து விடுவதே புத்திசாலிக்கழகு.

"அடக்க மமரருளுய்க்கு மடங்காமை
ஆரிருளுய்த்து விடும்"

என்பது நாயனார் அருமொழி அடக்கமே யாவர்க்கும் அரும் பூஷணம். அதையே முக்கிய ஆபரணமாகக் கொண்ட நம் சகோதரிகளிற் சிலரும் அதைக்களைய எண்ணுவது மூடத்தனமே. எவ்வளவுதூரம் அதிகாரமிருந்தபோதிலும் அடக்கமென்னும் விலையில்லா மாணிக்கத்தைக் கிரீடத்தில் பதித்து பொறுமை என்னும் சிங்காசனத்தில் வீற்றிருந்து, அன்பெனும் செங்கோலோச்சினால் மட்டும் மேன்மையளிக்கும் அதுவே நம் சமூகத்தில் யாவராலும் போற்றற்குரியது.

* * * *

"பேதமை யென்பது மாதர்க்கணிகலம்" என்ற பழமொழியின் கருத்தை உள்ளபடி உரைக்க முன்வந்த நம் சகோதரிக்கு அவர்தம் சமூகச் சகோதரிகள் நன்றியுடையவர் களாயிருப்பார்களென்பதற் கையமில்லை. இவ்வளவு தூரம் முன்வந்த சகோதரியின் ஆற்றல் போற்றற்குரியது. கற்றறிந்த சகோதரிகள் இதைப்பின்பற்றி இப்படி முன்வந்து கருத்துரைப்பின், பெண்மக்களை இழிவுபடுத்த எண்ணும் ஆடவர் வெட்கித்தலைகுனிவர். மற்ற அறிவாளிகள் உதவிபுரிவர்.

* * * *

"பெண்கள் கடமை" அவர்களது கடமையையும், சொந்த பாஷைக் கல்வி அவர்கட்கு அவசியம் வேண்டு மென்பதையும், வலியுறுத்துகின்றது. ஆண், பெண், என இருபிரிவு எம்பெருமானால் உலக வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ளது. மக்களில் மட்டுமல்ல விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகிய எல்லாவற்றிலும் இந்த நோக்கங்கொண்டே இறைவனால் இப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்விருசாதிக்குரிய ஏற்றத் தாழ்வும், உடம்புப் பெலனும் கூடஅப்பரனால் நியமிக்கப்பட்டிருக்கிறது. நாகரீக முதிர்ச்சியால் பெண் பெண்மையை இழப்பதும், ஆண் ஆண்மையை இழப்பதும், கடவுளுக்கு விரோதமானசெயல்களென்றால் குற்றமாகாது. அவரவர் தம்தம் தொழிலைச் செய்ய வேண்டுமென்பதே ஆண்டவனின் கட்டளை. பெண் இல்லறத்தில் அரசி ஆனதினால் வீட்டைப்பாதுகாக்கவே அவளுக்குப் பெற்றோர் முதலில் கற்றுக் கொடுக்கவேண்டும். பாடசாலைக்கல்வி சிறிது கற்றுமுடிந்ததும், பெண்மக்களுக்கு வீட்டுப்படிப்பு அவசியம் கற்றுக் கொடுக்க வேண்டியது பெற்றோர்கடனே.

* * * *

எதுமிச்சம் பழத்தின் நன்மைகளை வாசித்து அறிவதுடன் அதுபவத்தில் அறிந்து கொள்வதே நல்லது. மிகச் சுலபமாகக் கிடைக்கக்கூடிய இயற்கை மருந்துகளை விட்டு, காசு கொடுத்துப் பெறும் செயற்கை மருந்துகளை உபயோகிப்பது புத்திசாலித்தனமாகாது சகோதரி அவர்கள் இப்படி நன்மையான பொருட்களை இன்னும் ஆராய்ந்து அறிவிப்பார் களென எதிர்பார்க்கிறோம்.

* * * *

"சிக்கனம்" என்ற கட்டுரையை வாசிக்க முன் பொருளைச் சிக்கனமாகச் செலவு செய்வதற் கேற்ற வழியோ என எண்ணி விடாதீர்கள். நம் மவர்க்கு பெற்றோரால் அருமையுடன் வைக்கப் படும் அரிய பெயர்களை அவர்கள் எப்படி எப்படி வெட்டிக் குறைத்துச் சிக்கனம் செய்துகொள்ளுகிறார்களென்பதைக் காட்டுகிறது. அத்துடன் தலையிலுள்ள மயிரையும் முகத்திலுள்ள மீசையையும் சிக்கனம் செய்பவர்களையும் குறிக்கும் இக்கட்டுரைக்கு "விகடத் துணுக்கு" என்றால் சாலவும் பொருந்தும்.

* * * *

மாமியைப் போன்ற உண்மைச் சினேகிதர் சினேகத்தை விரும்புவதொழிய இப்படியான முறையைக் கவனிக்க மாட்டார்கள். போகவர வசதியுள்ளவர் வசதியில்லாதவரைப் போய்ச் சந்திப்பதில் ஒரு குறையும் நேர்ந்துவிடாது. உண்மைச் சினேகிதருள் முறை பார்ப்பது மகா கேவலம். அது உண்மைச் சிநேகமன்று. ஆனால் மரியாதையாக வரவேற்காதவர் வீட்டிற்குச் செல்வதும் அழகல்ல.

"மதியாதார்முற்றம் மதித்தொருக்காற் சென்று
மிதியாமை கோடி பெறும்"

என்று பெரியோரும் கூறியுள்ளார். உண்மையில் உபசரிக்கத் தெரியாதவரும் உண்டுதான். அப்படியானவர்க்குப் புத்தி சொல்லித் திருத்திக் கொள்ளலாம். ஆனால் அகங்காரங் கொண்ட

(தொடர்ச்சி 29-ம் பக்கம் பார்க்கவும்).

: பெண்ணரசியின் பிரலாபம் :

விதி! கொஞ்சமும் இரக்கமின்றி நஞ்சினும் கொடியதாக துன்புறுத்துகின்ற கொடிய விதி! சட உடலழிந்து சாம்பலாயினும், மறு பிறவியிலும் ஆன்மாவைத் தொடர்ந்து வாட்டும் வெவ்விய விதி! மதிநலத்தை மறைத்து மக்களைத் தன் வசப்படுத்தி ஆட்டி வைக்கும் விதி! உத்தம உள்ளத்தினரையும் மிகமிகக் கொடுமையாகச் சோதிக்கின்ற அருளற்ற விதி! எவ்வளவு முயன்றாலும், எவ்வளவு சகித்திருந்தாலும், எவ்வளவு காத்திருந்தாலும், வெற்றிக்குச் சற்று மிடமில்லாமலே செய்துவிடும் கொடியவிதி! 'நாடகச் சிவனைக்கூட ஓடெடுக்கச் செய்த விதி! அரம்பையரின் ஆடல் பாடல்களில் அகமகிழ்ந்து கற்பக நிழலிலிருந்து பற்பல இன்பங்களும் துகர்ந்து அமரர்களின் அரசனைச் செருக்குன்றிருந்த தேவேந்திரனை, அரக்கர்களின் கொடுமைகளுக்கஞ்சி ஒடுங்கச் செய்த கொடும் விதி! மாதா வயிற்றினின்றும் மண்ணில் விழும்பொழுதே மக்களைப்பற்றிக் கொள்ளும் விதி! ஆ! அத்தகைய விதியின் சக்திதான் என்னே! என்னே!

"விதியை மதியால் வெல்லலாம்," என்று சிலர் சொல்லிச் சென்றனர். அத்தி பூத்தாற் போல் எவரோ இரண்டொருவர் அம்மொழியை மெய்ப்படுத்தியும் சென்றிருக்கின்றனர். ஆயினும் சாக்ஷாத் பகவானின் அவதாரமாக உலகில்ப் பிறந்த இராமபிரான் முதலியவர்கள் கூட அக் கொடிய விதியை வெல்ல முடியவில்லை. சக்கரவர்த்தியின் திருமாளிகையில் பளிங்குக் கற்களமைக்கப்பெற்ற தரைமீது நடந்தாலும் பஞ்சினும் மெல்லிய பதமலர்கள் சிவந்து விடுமென பாகிமார் மென் மலர்களை முன்னே பரப்பிச் செல்ல, அவற்றின்மேலடியிட்டு நடந்து சென்ற சீதாதேவியைக் கற்களும் முட்களும் நிரப்பப் பெற்று கரடுமுரடான காகைத்திலே, கனலென வெதுப்பும் கதிரவனது கடிய வெயிலிலே நடந்து செல்லவும் செய்வித்த கொடிய விதிக்கு, அருள் நிரம்பிய அகத்தினராகிய பெண்களின் மேல் எக்காலத்திலும் இரக்கம் என்பதே இல்லையோ? எவ்வளவு தூரம் தனது கொடுமையைக் காட்டினும், பொறுமையோடு சகித்துக் கொண்டு நடக்கும் ஏழைப் பெண்களோடெதிர்த்துநிற்கக் கோழைவிதிக்குக கொஞ்சமேனும் வெட்கமே யில்லையா? பிறர் படுந் துன்பங்களை தமக்கு நேர்ந்த துன்பங்களாகவே மனதிற் கொண்டு பெரிதுமிரங்கி நிற்கும் தயை மிகுந்த மாந்தர்கள் மீது, பிறர் வருத்தம் அறியாத வல் விதிக்குச் சிறிதும் அன்பே இல்லையா? நல்லாரை இன்புறுத்தி பொல்லாரைத் துன்புறுத்த வேண்டிய விதி, அதற்கு நேர்மாறாக தீயோர்க்கு மகிழ்வூட்டித் தூயோர்க்குத் துன்பூட்டுவதில் முனைந்து நிற்பதும் முறைதானே? அதுவும் ஒரு ஆற்றலாகுமோ? பெருமையாகுமோ? ஈசன் ஆணை இதுவேயோ?

செந்தமிழ் நாட்டுத் தாய்மாரே! தமைக்கையரே! தங்கையரே! இரக்கமற்ற வெவ்விய விதியின் கொடுமைக்கு இலக்காகி எண்ணிறந்த துன்பங்களை அனுபவித்தும், இப்பிறவியிலே இன்பத்தைக் காண்பதற்கில்லாமல்ப் போய்விட்ட என்து வரலாறு எவர் மனதையும் உருக்கக் கூடியதாகும். அது வெவ்விதியைச் சிறிதளவு உருக்கா தொழிந்தாலும், உங்களது உள்ளத்தையேனும் உருக்குமென்று நம்புகிறேன். துன்பம் நிரம்பிய எனது வரலாற்றை அறிய ஒருக்கால் விருப்பாவிடினும், இத்தமிழ் நாட்டிலே என்னைப்போன்று இன்று அகம் குமுறி நிற்கும் ஆபிரக்கணக்கான சகோதரிகளின்மேலேனும் உங்களுக்கு அனுதாபம் பிறக்கக் கூடுமென்ற நம்பிக்கையினாலே உங்களுக்குத் தெரிவிக்க மனங் கொண்டேன். இச் சரிதையை உங்களுடைய கனிவருகு எடுத்துரைத்து இனியேனும் இல்லற வாழ்க்கையில் விளையும் தொல்லைகள் குறையச் செய்து விடுவீர்களானால் அருள் வடிவினரான ஆண்டவன் உங்களுக்கு இன்னருள் செய்வான். இச்சய சரித்திரத்தை வெளியிடுவதினால் என் ஓய்த்திக்கு விடுதலை கிடையாதொழியினும், என்னைப் போன்று வருந்தி நிற்கும் சகோதரிகளில் சிற்சிலரேனும் தங்கள்துன்பங்களினின்றும் விடுதலை பெறுவார்களாயின், எனது ஆவி மகிழ்ச்சியோடு இவ்வுலகை விட்டுப் பிரிந்து செல்லும்.

துன்பப்படுவோரனைவரும் ஏழைகளே யென்றும், செல்வத்திற் சிறந்தோரைத் துன்பங்களையும் நெருங்காதொழியும் என்றும் சிலர் எண்ணக்கூடும். ஆனால், எனது வாழ்க்கையில் கண்டறிந்த அனுபவத்தின் பயனாக 'இன்ப துன்பங்களுக்குக் காரணமாக நிற்பது அவரவர் மனநிலையேயன்றிப் பொருள் நிலையாகாது' என்பதை நன்குணர்ந்து கொண்டேன். 'காதல் இருவர் கருத்து ஒருமித்து' நடத்தும் வாழ்க்கை எளிய குடிசை வாழ்க்கையேயாயினும், விதியின் கொடுமையைப் பொருட்படுத்தாத எள்ளிநகையாடும் வீர வாழ்க்கையாகும். எத்தகைய பெருஞ் செல்வமுங் கூட உண்மைக் காதல் வாழ்வு நடத்தும் பேறு வாய்க்கப் பெறுதோர்க்கு சிறிதளவும் மெ

ய்யின்பம் ஊட்டக் கூடியதாகாது. யான் ஒரு இலட்சாதிபதியின் மகளாகப் பிறந்தேன். ஆனால், 'பிறப்பது ஆண் குழந்தையாக பிறக்க வேண்டு' மென்று எவ்வளவோ முறைகளில் பிரார்த்தனைகளும் தானதருமங்களும் புண்ணிய ஸ்தல யாத்திரைகளும் செய்து பகவானை வேண்டிக் கொண்டிருந்த எனது பெற்றோர்களுக்கு, யான் பெண்ணாகப் பிறந்துவிட்டது பெரும் ஏமாற்றத்தையும் வருத்தத்தையுமே விளைவித்ததாம். மண்ணில் விழுந்த மறுகணமே, 'பிறந்தது பெண்' எனக் கேட்ட எனது தந்தை 'சீ பெட்டைக் கட்டையா' என்று மிக்க சலிப்புடன் வெறுத்துக் கூறியதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயினும், முதன் முதல் பிறந்த காரணத்தினால் எனது தாயார் மட்டும் என்னை அன்போடு வளர்த்து வந்தாளாம். யான் விளையாட்டுக் குழந்தையாக இருந்தபோது கூட என்னைத் தூக்கிக் கொண்டு சீராட்டியவர்களெல்லாம் பெண்களாகவே இருந்ததாக நினைவிருக்கிறதேயன்றி, ஆடவரெவரும் என்னைத் தூக்கிச் சீராட்டியதாக நினைவில்லை. எனக்குப்பின் எனதுதாய் ஒரு ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தை பிறந்து விட்டபின், என்னைக் கவனிப்போர் அன்னையைத் தவிர வேறு எவருமில்லை. எனது தம்பி எல்லோர் மடியிலுமேறிக் கொஞ்சி விளையாடிக் குதூகலிப்பதைப் பார்க்கும் போதெல்லாம், தந்தையின் தோள்களில் ஏறிக்கொண்டு 'கலகல' என்று சிரிப்பதைப் பார்க்கும்போதெல்லாம்— தானும் ஒரு ஆணாகப் பிறக்கப் பாக்கியம் செய்யவில்லையே என்று எண்ணிறந்த முறைகளில் ஏங்கித் கண்கலங்கி நின்றது இன்னும் நினைவிலிருக்கின்றது.

எனது வீட்டுக்கு வந்து போவோரும் பந்துக்களும் எனது தந்தையுங் கூட, 'அடிப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு?' என்று கூறி, எனக்குக் கல்விபுகட்டுவதை அனுதாபித்தே பேசி வந்தனர். ஆயினும், முற்பிறப்பில் செய்த புண்ணியத்தின் பயனாக எனக்கு வாய்த்த தாயார், மற்றப் பெண்களைப்போல் பிற்போக்கான நோக்கம் உடையவளாக இருந்து விடாமல் கல்விச் செல்வத்தால் விளையுமுண்மை இன்பத்தைச் சொந்த அனுபவ வாயிலாகக் கண்டு உணர்ந்தவளாக இருந்ததன்பயனாக தனது தோழிகளிலொருத்தியைக் கொண்டு, எனக்குக் கல்விப் பயிற்சியில் மேன்மேலும் பேரார்வம் பெருகி வளர்ந்து வருமாறு செய்து வந்தாள். யானும் மற்றத் துன்பங்கள் எவற்றையும் பொருட்படுத்தாமல் படிப்பிலேயே எனது கவனத்தைச் செலுத்தி மகிழ்ந்து வந்தேன். தந்தையின் அனுமதி கிடைக்காதொழிந்தால், கலாசாலை எதற்கும் செல்ல வழியில்லாமல் வீட்டிலிருந்தவாறே எனது சிந்தைக்கினிய கம்ப ராமாயணம், வில்லி பாரதம், திருக்குறள் முதலிய சீரிய நூல்களின் இன்பத்தைச் சுவைப்பதிலேயே பொழுது கழித்து வந்தேன். அவை அறிவுறுத்திய அரும பொருள்கள் பலவற்றையும் வெறும் பொழுது போக்குக்காக மட்டும்பாராமல், சிறந்த பொருள்களாகத் தோன்றுவனவற்றை எனது இருதயத்தில் நன்கு பதிய வைத்துக் கொண்டேன். சங்கீதத்திலும் எனக்கு மிக்க ஆர்வமிருந்ததால், அன்னையினுதவியினால்நல்லாசிரியர் துணைகொண்டு வீணை வாசிப்பதிலும் சிறந்த தேர்ச்சிப் பெற்றேன். இவ்வாறு, பதினாறு வருஷங்களைக் கழித்தேன்.

எனது பெற்றோர்கள் எனது கலியாணப் பேச்சில் தலைப்பட்டனர். தமது பெண்ணுக்கு கணவனாக வாய்ப்பவன் செல்வச்சீமானாக இருக்க வேண்டுமென்று தாயும், கல்வியாளனாக இருக்க வேண்டுமென்று தந்தையும் விரும்புவர், என்று பெரியோர் சொல்வதுண்டு. ஆனால் அது எனது பெற்றோரைப் பொறுத்தமட்டில் முற்றிலும் நேர்மாறாக மாறிவிட்டது. தந்தை தன்னைப் போன்ற ஓர் இலட்சாதிபதியையும், தாயார் யான் பெற்ற கல்வியறிவின் அருமை கண்டு களிக்கக்கூடிய ஒரு கலாவிற்பன்னனையும் மாப்பிள்ளையாகக் கொள்ள விரும்பினர். தாயின் கருத்தைக் கேட்ட தந்தை, அவளது கருத்திற்கிணங்க கலாவிற்பன்னனும் செல்வச் சீமானுமாக ஒரு மாப்பிள்ளையைத் தெரிந்து வைத்திருப்பதாகக் கூறவே, தாயும் தடை எதுவும் கூறாது இணங்கி விட்டாள். அச்சமயத்தில் மாப்பிள்ளை எத்தகைய கலாவிற்பன்னர் என்று தாயார் கேட்டதற்கு, "பெண்களின் கௌரவத்தை நன்கு உணர்ந்து நடத்தத் தக்க ஆங்கிலக் கல்வி பயிற்சியில் சிறந்த தேர்ச்சிப்பெற்று உயர்ந்த பட்டத்தைப் பெற்றவர்" என்று தந்தை பதிலிறுத்தார். அம்மாபிள்ளை, தமிழ்நாட்டு இலக்கியங்களில் காணப்படுமின்பத்திற்கு எத்தகைய மதிப்புத் தரக் கூடியவர் என்பது எனக்கேனும் எனது அன்னைக்கேனும் கலியாண காலத்தில் தெரியாது.

செல்வர் வீட்டுக் கலியாணம், அதிலும் இலட்சாதிபதியின் வீட்டுக் கல்யாணமென்றால், சொல்லவும் வேண்டுமோ? சீர்வரிசைகளிலும் வரதட்சிணையிலும் மற்றக் கலியாணச் செலவுகளிலும் தமது அந்தஸ்துக்கு குறைவு நேராதவாறு நடந்து கொள்ள விரும்பிய தந்தையார் பணத்தைத் தாராளமாகச் செலவழித்தார். ஒருநாள் இருநாட்களலல, ஒரு வாரம் கலியாணக் கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

எனது கணவனது படிப்பிற்கு இடையூறு நேராதவாறு கலியாணமான பின்னும் 3 வருட

காலம் எனது தாய் வீட்டிலேயே யான் தங்கி யிருக்க நேர்ந்தது. பின் எனக்கு எனது கணவன் தந்த ஒப்பற்ற செல்வமாகிய குழந்தையோடு கணவன் அகமடைந்தேன். இரண்டொரு மாத காலமாக எவ்விதக் கவலையு மின்றிபொழுது கழிந்து வந்தது. ஓ நாள் எனதறையில் "ஸீதம்ம மாயம்ம—ஸ்ரீராமுடுமாதண்ட்ரி" எனும் திபாக ராஜ கீர்த்தனையை வீணையில் மீட்டிப் பாடிக் கொண்டிருந்தேன். எங்கிருந்தோ அப்பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்த என் கணவர், திடீரென்று உள்ளே நுழைந்து, "இதென்ன கர்நாடகம்! சீச்சீ! சுரைக்காயைக்கூட ஒரு வாத்தியமாக வைத்துப்பாட உட்கார்ந்துவிட்டாயே!" என்று கடுகடுத்துக் கூறி, அதைப் பிடுங்கி வீசி எறிந்துவிட்டார். "அழிந்தது பீடை! ஒழிந்தது அபசுரம்! நாளை முதல் ஹார்மோனியம் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்கிறேன். இனிமேல் நீ இந்த வீட்டில் வாழ வேண்டுமானால், கேவலம் கர்நாடகமாக இருக்கக்கூடாது! நாகரிகமாக மொழக் கற்றுக்கொள்! ராமாயணமாம் கீமாயணமாம்! எலலாம் முழுப் பொய் புரட்டுகள்! கேவலம் மூட நம்பிக்கை வளர்க்கக் கூடியவைகள்! அவைகள் எல்லாமினிமேல் நீ கண்டிப்பாகத் தொடவே கூடாது. நாளை முதல் இங்கிலீஷ் கற்றுக் கொடுக்கிறேன். கவனமாக நீ கற்றுக் கொண்டு வரவேண்டும். உன் பழைய குருட்டு நம்பிக்கைகளை யெல்லாம் பழைய எண்ணங்களை எல்லாம இன்றோடு விட்டுவிடு" என்று கூறி அவ்வறையை விட்டகன்றார்.

அவரகன்ற மறுகணமே, அகத்திற் குமுறிக் கொண்டிருந்த அருந்துயரைப் பின்னுமடக்கி வைத்துக் கொள்ள என்னால் முடியாமலப் போகவே தரையில்க் குப்புறப் படுத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழலானேன். எனது இருதயத்தினின்றும் பொங்கி எழுந்த ஆற்றொணாக் கொடுந் துயரால், எனது கண்களினின்றும் பெருகிய கண்ணீர், நிலத்தை நனைத்தது. எனது கணவர் சினந்து கூறிய கடுமொழிகளை நினைத்தும் அவ்வாறு யான் அழவில்லை; எவ்வளவோ ஆசையோடு யான் போற்றி மகிழ்ந்த எனது சிங்தைகினிய செல்வ வீணையை அவர் வீசி யெறிந்து உடைத்துவிட்டதற்காகவும் யான் அழவில்லை; கலையைப் எளிதினின்புறச் செய்யும் ஒப்புயர்வற்ற மாசில் வீணையின் ஓசையை அவர் மதியாது பழித்ததற்காகவும் யான் அழவில்லை. எனது உள்ளத்தையும் உயிரையுமொருங்கே உவகைக் கடலிலாழ்த்தக் கூடியதும், எனது ஆன்மாவை உய்விக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்ததென்று உறுதியாக நம்பி வந்ததும், யான் பெற்ற பிறவியின் ஒப்பற்ற உயர் தனிப் பெரும்பேறாக எனது உள்ளத்தில் கொண்டிருந்ததுமான செந்தமிழ் நாட்டுச் சீரிய இலக்கியப் பயிற்சியை முற்றிலும் கைவிட்டு விடுமாறு எனது கணவன் உத்தரவிட்டதொன்றையே எண்ணி நெஞ்சு புண்ணுகிக் கண்ணீர் சொரிந்து கலங்கலானேன். திருமணத்திற்கு முன்பே, எனது கணவன் இத்தகைய "கலாவிற்பன்னர்" என்று தெரிந்திருந்தால், அவருக்கு மாலையிடச் சற்றும் சம்மதியேன்.

ஆங்கில மொழியைப் பயின்றுல்தான் என்ன! அயல்நாட்டு மன்னர்களுடைய வரலாறுகளையும் பிறநாட்டு இயற்கை வளங்களையும் செயற்கைச் சிறப்புகளையும் படித்தால்தானென்ன! அதனுலேயே தாய்த் திருநாட்டின் தனிப் பெருஞ் செல்வங்களாகிய சீரிய இலக்கியங்களை வெறுத்து விலக்கி விடவும் துணிவு கொண்டு விடுவதோ? செந்தமிழ் நாட்டுத் தெய்வப் புலமைப் பெரியோர்களியற்றிய அன்பும் அறிவும் பொங்கித் ததும்பும் இனைப் பாக்களையும் புறக்கணிக்கவும் மனங் கொண்டு விடுவதோ? மேல் நாட்டாரின் நாகரிகத்தைப் பெரிதும் போற்றுவோர், அவர்களுக்கு உள்ள தாய்நாட்டுக் கலைச் செல்வப் பற்றை மட்டும் கவனிப்பதேனவோ? ஈசனே நம் நாட்டில் அன்பு இல்லாத ஒருவருக்கு வாழ்க்கைப்படவோ, என் தலை விதியை அமைத்தாய்! எனது இனிய வாழ்க்கையில் இன்பத்திற்கே இடமில்லாமற் போய்விடுமோ? என்று பல திறப்பட்ட சிந்தனைகளில் தலைப்பட்டு கலைக் கடலிலாழ்ந்தேன்.

அச்சம்பவத்திற்குப் பின் 2 ஆண்டுகள் கழிந்தன. எனது கணவரது பெற்றோர் மண்ணுலக வாழ்வைத் துறந்து விண்ணுலகெய்தினர். பெற்றோர் மறைந்தபின் எவரும் கேட்பாரில்லாமையால், எனது நாதர் பற்பல தீயோரது கூட்டுறவைக் கொண்டார். மதுபானப் பித்தும் சூதாட்டப் பயித்தியமும் குதிரைப பந்தய மயக்கமும் எனது கணவருக்கு நாளுக்கு நாளதிகரித்து வரலாயிற்று. ஒரு வருட காலத்துள் அவர் குடும்பச் சொத்தில் பெரும் பகுதியையுமொழித்து விட்டார். பாக்கியிருந்த சொத்துக்களை யேனும் காப்பாற்றக் கருதிய யான், ஒரு நாளவரிடம் சென்று நின்று "ஆரிருயிர்த் தலைவரே! தாங்கள் குடும்ப முன்னேற்றத்தில் கவலையற்றிருந்தால், நமது கண்மணி காசிநாதன் பிற்காலத்திலாதரிப்பாரின்றி அனாதையாகத் தவித்து நிற்க நேர்ந்து விடுமல்லவா? இனியேனும் சிறிது கருணை கொண்டு தங்களை வீண் செலவுகளுக்கு உட்படுத்து வோரது கூட்டுறவை நீக்கலாகாதா?" என்று மெல்லிய குரலில் கூறித் தலை கவிழ்ந்து நின்றேன். அம்மொழிகள் அவரது செவிகளில் விழுந்ததும் அவர் சீறி எழுந்து

நின்றபடியே "பூட்சு" அணிந்த காலால் என் வயிற்றிலுதைத்தார். யானச்சமயம் ஆறுமாத கர்ப்பவதியாக இருந்ததால், சகிக்க மூடியாத கொடிய வேதனையோடு தரையில் விழுந்தேன். என் வயிற்றிலிருந்த சிசுவுக்கு என்ன நேர்ந்ததோ என்று என் மனம் பெரிதும் பதறியது. கண்களிலிருந்து நீர் தாரையாகப் பெருகியது. எனது செவிகளில் பின் வரும் மொழிகள் விழுந்தன. "ஒரு பெட்டைக்கட்டையின் புத்தியைக் கேட்டுத்தான் நான் பிழைக்க வேண்டுமோ? என் வீட்டுச் சொத்தை நான் அழித்தால், என்னைத் தடுக்க உனக்கு என்ன தைரியமடி! உன் மகன் உழைக்காமல் சோம்பேரியாக ஊர் சுற்றித் திரிவதற்காக அவனுக்கு நான் சொத்தும் சேர்த்து வைக்க வேண்டுமோ? உன் கொழுப்பெல்லாம் "நானு மொரு படித்தவள்" என்ற அகங்காரத்தாலுண்டானதுதானே! அதைக் கூடிய சீக்கிரம் எப்படி அடக்குகிறேன் பார்!"

ஒருநாள் வெளியிலிருந்து வீட்டுக்கு வந்த எனது கணவனுடனே, நவீன நாகரீக உடை உடுத்திய சட்டைக்கார மாது ஒருத்தியும் வந்தாள். அவள் முகத்தை நான் ஏறிட்டு நோக்கியபோதே, அவள் நல்லொழுக்கமுடையவளோ எனும் சந்தேகம் என் மனதிற் தோன்றியது, பின் எனது கணவன் என்னைக் கூப்பிட்டு "இன்று முதல் நீ எனக்கு மனைவியாக இருக்கத் தகுந்த யோக்கியத்தை உடையவளல்ல. உன்னை எனது மனைவியென்று எனது நண்பர்களிடம் சொல்லிக் கொள்ளவும் வெட்கமாயிருக்கிறது. ஆதலால் எனது மனத்திற்கு மகிழ்வூட்டக் கூடிய நவீன நாகரீகத்திற் சிறந்த இந்தச் சுந்தரியைக் கொண்டு வந்திருக்கிறேன். இன்றுமுதலிவளே இவ்வீட்டு எஜமானி. உனக்கு இனி இங்கிருக்க இஷ்டமிருந்தால் இவளுக்கு வேலைக்காரியாக இருக்கச் சம்மதமானாலிரு; இல்லாவிட்டால் இப்பொழுதே உன் தாய் வீட்டுக்கு ஓடிப்போய்விடு" என்று கூறினர். தெய்வமே! அன்று அவர் கூறிய அம்மொழிகளை, இன்று என் மனம் நினைத்துக் கொண்டு விட்டாலும் எவ்வளவு பாடு படுகிறது.

கற்பிற்சிறந்த மங்கை, தனது கணவனுல் விளையும் எத்தகைய துன்பத்தையும் சகித்துக்கொண்டு விடக்கூடும், ஆனால் அவரால் மனமார வெறுத்து விலக்கப்படுவதையும், தானிருந்தபதவியில் எவ்வகையாலும் சிறிதளவும் தகுதியில்லாத வேறொரு இழிந்த மாது மதிமயக்கங்கொண்டு அமர்த்தப்படுவதையுங்கூடச்சகித்துக்கொண்டிருக்கவேண்டுமென்றால், ஐயோ! அவளது மனநிலை என்னுகும்? என்மீதிருந்த ஆபரணங்களை யெல்லாம் எனது கணவர் கழற்றிக் கொண்டு விட்டார். ஒப்புயர்வற்ற ஆபரணமாக மதித்திருந்த கணவரையே மற்றொருத்திக்குப் பறிகொடுத்து விட்ட எனக்கு, கேவலம் வெறும் சுமையாகத் தோன்றிய ஆபரணங்களை இழந்து விடநேர்ந்தது துன்பமாகத் தோன்ற வில்லை அவற்றால் மகிழ்வுறக்கூடிய மனவாளரே அவை என்மேலிருப்பதை விரும்பாதபோது அவற்றால் எனக்கு என்னபயன்? புதிதாக வந்த மங்கையை ஸ்நானம் செய்விப்பது அவளது புடவைகளைத் துவைப்பது, அவளுக்கு அன்னம் பரிமாறுவது முதலியவைகளை யெல்லாம் நாடோறும் நானே செய்தாகவேண்டுமென்று எனது கணவரெனக்குக் கட்டளை யிட்டுவிட்டார் கணவனைக் களிப்பூட்டுவதற்காக எத்தகைய குற்றேவல்களையும் செய்வதில் சற்றும் சலிப்புறாத மனமுடையவான் எஜமானியாக வாழ்ந்திருந்த வீட்டிலேயே வேலைக்காரியாக வாழ நேர்ந்ததையும் விதியின் கொடுமை யென்று பொறுமையுடன் சகித்துக் கொண்டு விட்டேன்.

எனது கணவன் எத்தகையகொடிய வசைமொழிகளைக் கூசாது கூறினாலும் ஒருநாளேனும் அவரோடு எதிர்த்து நின்று ஒரு மொழியுமுரைத்தறியேன். புதிதாக வந்தவள் எத்தகைய இழிந்த மொழிகளால் என்னைத் திட்டினாலுமே, யானவளோடு ஒன்றும் எதிர்த்து நின்றதுமில்லை. வசை மொழிகளால் என்னை வருந்தச் செய்ய முடியவில்லை என்று கருதிய என்கணவர், கையாலும் கோலாலுமடிக்கத் தொடங்கிவிட்டார்.

எவ்வளவோ எச்சரிக்கையோடும் பயத்தோடும் வீட்டுவேலைகளைச் செய்துவந்தும், அடிகளுமுதைகளுமடிக்கடி கிடைத்து வந்தன. என் துன்பத்தைப் பிறரிடமுறையிட்டு ஆறுதல் பெறவும் நினையாது விதியின் கொடுமையை நினைத்து இறைவனிடமே முறையிட்டுக் கொண்டிருந்தான், வீட்டை விட்டுவேறு எவ்விடத்திற்கும் செல்ல விரும்பாதவளானேன். வீட்டிற்கு வருவோரிடமும் எனது கணவர் கொடுமையை முறையிட்டதுமில்லை. இவ்வளவு பொறுமையோடு யான் காலங்கழித்தும் எப்படியேனு மென்னை வீட்டை விட்டு வெளியே தூரத்தி விடவேண்டுமென்னும் தீவிர எண்ணம் எனது வாழ்வைக் குலைக்கவந்த மங்கையின் மனத்திலேற்பட்டு விட்டது. அதன்பயனாக, அம்மாது எனது கணவரிடம், "நாகரிகம் தெரியாத இந்தக் கர்நாடகக் கழுதைக்கு எனது மனதிற்கு இசைந்தபடி வேலை செய்யத் தெரியவில்லை. நானுங்களுக்கு வேண்டுமானால், இவளை உடனே வெளியில் தூரத்தி விடுங்கள்" என்று முறையிட்டாள். அவள் கூறியதற் கிணங்க ஒருநாள் எனது கணவர் என்னையழைத்து, "செக்கோசைக்கும் தம்பூருக்கு மொத்து வராததுபோல, நவீன நாகரிகத்தில் சிறந்த எனக்கும் கர்நாடகக் கழுதையாகிய உனக்கும் இனியும் பொருத்தமிருக்காது.

ஆதலால் மரியாதையாக உனது மகனை அழைத்துக் கொண்டு உனது தாய் வீட்டிற்குப் போய்விடு" என்று கூறினர்.

அம்மொழிகள் எனது செவிகளில், இரத்தமும் சீழும் வடியும் கொடிய புண்ணிலே கூரியவேல் பாய்ந்தது போல் சகித்தற்கரிய வேதனையை விளைவித்தன. இருதயத்திலிருந்து பொங்கியெழுந்த ஆற்றொணாத் கொடுந்துயரால், எனது கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் எனது கன்னங்களை நனைத்து யானின்ற நிலத்தையும் நனைத்தது. தழதழத்த குரலிலே "மனமறிந்து தங்களுக்கு ஒரு பிழையும் செய்தறியாத என்னை, தங்களையே தந்தையாகவும் தாயாகவும் குருவாகவும் தெய்வமாகவும் மனமார உறுதியாக நம்பி வந்துள்ள என்னை, தங்கள் பொருட்டு எத்தகைய துன்பத்தையும் இன்பமாகவே கொண்டு நடக்கத் தயங்காத என்னை தங்களோடேனும் தங்களது காதலியோடேனும் ஒருநாளும் எதிர்த்து நின்று பேசியறியாத என்னை—அக்கினி சாட்சியாக, பிராமணர் சாட்சியாக, சபையோர் சாட்சியாக பூமி தேவி சாட்சியாக ஆன்றோர் முன்னிலையில் என்றுங் கைவிடேனென்று உறுதி மொழி உரைத்து கைப்பற்றிய என்னை பாவி வெளியில் போகச் சொல்கிறீர்கள்? அடிபட்டாலும் உதைபட்டாலும் கந்தை கட்டினாலும் கூழ் குடித்தாலும் குற்றேவல் செய்தாலும் தங்களோடு வாழ்வதிலுள்ள திருப்தி, வேறு எவ்விடத்திலெனக்குக் கிடைக்கும்? எனக்காக மனமிரங்காவிட்டாலும், தங்கள் தந்தருளிய செல்வனுக்காகவாவது என் மேலிரக்கங் காட்டக்கூடாதா?" என்று இரு விழிகளினின்றும் நீர் பெருகி வழிய நின்று கூறி அவரது அடிகளில் வீழ்ந்தேன்.

ஐயோ! தெய்வமே! அப்பொழுது கூட அவர் மனங் கொஞ்சங்கூட இளகவேயில்லையே! தனது கால்களில் விழுந்து கெஞ்சுபவரை கொஞ்சமும் நெஞ்சு இரக்கமின்றி தலையில் எட்டி உதைக்கவும் மனங் கொண்ட ஒருவரையும் எப்படித்தான் படைத்தாயோ? எனது செல்வ மகனின் மயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து என்னருகில் நிறுத்திய அவர் "இப்பொழுதே உன் அம்மாளுடன் உன் பாட்டி வீட்டுக்கு ஓடிப் போய்விடு. இல்லாவிட்டால் இன்று இராத்திரி உன்னையும் உன்னம்மாளையும் ஒருவருக்குந் தெரியாமல் கட்டாயம் கொலை செய்து ஒழிப்பேன்" என்று மிகுந்த கோபத்துடன் சொல்லிவிட்டுப் போய்விட்டார். "அம்மா! அம்மா! அப்பா உன்னையும் என்னையும் கொன்னுடுவென்னு சொல்லிட்டுப் போயிட்டாரே! இன்னுமே இங்கே நானிருக்கவே மாட்டேன். இப்பவே கிளம்ப நம்ம பாட்டி வூட்டுக்குப் போயிடலாம் வா!" என்று அழுது கொண்டே கூறினான் எனது செல்வக் கண்மணி. எனக்குத் தாலிகட்டிய கைகளே, எனது கழுத்தைக் கத்தி கொண்டு அறுத்து விடுவதும் எனக்குப் பரம சம்மதமாகவே யிருந்தாலும் எனது வயிற்றிலிருந்த இளஞ் சிசுவும் பக்கத்திலென்னைப் பரிதாபமாக நோக்கி நின்ற செல்வச் சிறுவனும் எனது மனத்தை மாற்றிவிட்டனர். அவ்விருவருமனியாயமாகக் கொல்லப்படுவதற்குக் காரணமாக நிற்பது கொடும் பாபமென்று பெரிதுமஞ்சியான், வேறுவழியின்றி கண்ணும் கருத்தும் கலங்கிய வண்ணம் எனது செல்வ மகனோடு வெளிப்பட்டு எனது தாய் வீடு சேர்ந்தேன்.

'வீண் கவலைகளாலுடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளும்படி என்னை விட்டுவிடக் கூடாது' என்று மனங் கொண்ட எனது பெற்றோர் எவ்வளவோ முயற்சிகளைச் செய்து பார்த்தும், என் தாய் வீட்டிலெனது மனம் எத்தகைய இன்பத்தையும் பெறவில்லை. எவ்வளவோ சகிப்புத் தன்மையைக் கொண்டிருந்தும், இப்பிறவியிலேயே எனக்கு எத்தகைய இன்பமும் ஏற்படாமல் செய்துவிட்ட என் கணவனை இன்றும என் மனம் மறக்கத் துணியாது. வாயும் பழிக்கத் துணியாது. எனது இன்ப வாழ்க்கையை அவர் பாழ்படுத்தி விட்டாலும், அவரேனும் என்றுமின்ப வாழ்வு வாழ வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை. ஆண்டவனவருக்கு நீண்ட ஆயுளை அளிப்பாராக. இவ்வுலகவில் இவ்வுடலிருக்கும் கடைசி நாள் வரையில் எனது கழுத்தில மங்கலநாணும் குங்குமத் திலகமும் நீங்காதிருக்கும் பாக்கியத்தையாவது எனக்கு அளித்தருளுமாறு இறைவனை வேண்டுகின்றேன்.

எப்பொழுதும் எனது கணவரது நினைவு என் நெஞ்சில் நீங்காது இருக்குமாறு அவரது நினைவுக்குறியாக இறைவன் எனக்கு அன்மையில் அளித்தருளிய என் இளஞ்செல்வக் கண்மணியின் கன்னங்களிலே இதோ ஆசையோடு முத்தமிடுகிறேன். என்ன இது! எனது வாய்முத்தமிட்டாலும் எனது கண்களிலிருந்து பெருகுங் கண்ணீர் இச்செல்வனின் கன்னங்களை நனைக்கிறதே! முற்பிறப்பில் செய்த தீவினைப்பயனை இப்பிறப்பில் அனுபவித்துவிட்டேன். இப்பிறப்பில் என்மனமறிந்து எவருக்குந் தீங்கு நினைத்தறியேன். ஏ! இரக்கமற்ற கொடியனியே! மறுபிறப்பிலும் நீ என்னைத் தொடர்ந்து வாட்ட முடியுமோ?

மாய உலகம் அல்லது மானிடர் வாழ்வு.

இலங்காதீப கற்பத்தின் ஒன்பது பிரிவுகளில் ஒன்றாகிய வடமாகாணத்தின் வடபாகத்தில் ஒரு சிறு அழகான கிராமம் உண்டு. அங்கே மாதுளை, தோடை, எலுமிச்சை, மா, பலா முதலிய கனிதரு விருட்சங்களும், எல்லா விதமான கிழங்கு வகைகளும், தானிய வகைகளும், ஏராளமாகக் காணலாம். அங்கேயுள்ள ஜனங்களில் அதிகப்பற்றுமேனோர் கமத்தொழிலில் செய்பவர்களே. அரசாங்கத்தார்களும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பண்படுத்தி எல்லாவிதமான மரக்கறி வகைகளும், சணல், புகையிலை முதலியனவும் பண்படுத்தப்படுவதைக் காணலாம். இதற்குக்காரணம் உவர்ப்பு இல்லாத சுத்தமான ஜலமும் நல்ல பசளையான நிலமுமே. இப்படியாக அந்நாடு எல்லோராலும் வியர்ந்து கொள்ளத்தக்கதாக இருந்தது. அங்குள்ள குடிஜனங்களும் மிகவும் நல்லவர்களே. கனகராயமுதலியார் என்பவர் தமது மனைவி சீதாதேவியுடன் அங்கே வந்து ஒரு சிறு கிராமப்பள்ளிக்கூடம் ஒன்றை ஸ்தாபித்து, அதைக் கிறிஸ்தவப் பாதிரிமாரின் மேல்பார்வையில் நடத்தலானார். அவருக்கும் அவரது மனைவிக்கும் இருபத்தைந்து ரூபா சம்பளம் கிடைத்தது. அதுவே அந்தக் கிராமத்தில் முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடம். கனகராயரின் கடவுள் பக்தி, அன்பு, தர்மசிந்தை முதலிய குணங்களைக் கண்ட அவ்வூர் ஜனங்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பப் பின்வாங்கவில்லை. ஆண்களும் பெண்களுமாக, ஏறக்குறைய நாற்பது பிள்ளைகளுக்குமேல் படிக்கலானார்கள். கனகராயரின் மனைவி ஓளிந்த நேரங்களில் அங்குள்ள பெண்களுக்கு வேண்டிய புத்திமதிகள் சொல்வதிலும், தையல் வேலை கற்றுக் கொடுப்பதிலும் முயற்சியாக இருப்பாள். கனகராய முதலியார் தற்கால நாகரீகக் கல்வியாகிய ஆங்கிலம் அதிகம் அவருக்குத் தெரியாவிடினும், தமது தாய்பாஷையையும், புராணங்கள், இதிகாசங்கள், பகவதகீதை, திருக்குறள், தாயுமானவர் பாடல், பட்டணத்தார் பாடல் முதலிய சன்மார்க்க நூல்களையும் நன்றாக கற்றிருந்தார்.

அவ்வூர் ஜனங்களுக்கிடையில் ஏற்படுகிற வாக்குவாதங்களையும் பிரிவினைகளையும், அவரும் அவரது மனைவியுமே நியாயம் விசாரித்துத் தீர்ப்புச் சொல்லி அனுப்பி விடுவார்கள். இந்தவிதமாகவே தங்களது நாட்களை அந்த ஊர் ஜனங்களுடன் அதிசந்தோஷமாக நடத்தி வந்தார்களெனலாம். அவர்களுக்கு ஆண்டவனருளால் இரு புத்திரரும் இரு புத்திரிகளுமுண்டு. அவர்களெல்லோருடைய நாமங்களையும் இங்கு எழுதுவது அவசியமில்லை. அவர்களின் இளைய குமாரத்தி முத்துமலரைப் பற்றித்தான் நமது கதை ஆரம்பமாகிறது.

முத்துமலர் சிறுவயதிலேயே தர்ம சிந்தை கபடற்றமனம் கடவுள் பக்தி முதலியகுணங்கள் அமையப்பெற்றவளாகக் காணப்பட்டாள். இப்படியாக வளர்பிறைச் சந்திரன்போல் அழகிலும், குணத்திலும், கல்வியிலும் வளர்ந்து வந்தாள் அபபூங்கொடியாள். முத்துமலர் தனது பன்னிரண்டாம் பிராயத்தில் ஆரம்பப்பாடசாலையில் படிப்பதைவிட்டு, நல்லூர் என்னுமிடத்திலுள்ள பெண்கள் விடுதிக்கல்விச் சாலையில் கற்று வந்தாள். விடுமுறை நாட்களானதும் கனகராயர் தனது மகளை வீட்டிற்கு அழைத்து வருவார்.

மாதாவானவள் தான் பெற்றபிள்ளைகள் எல்லோரையும் சமமாக நேசிக்கிறதும், பிதாவானவன் தனது அன்பை சிலபிள்ளைகளிடம் கூட்டியும் சில பிள்ளைகளிடம் குறைத்துக்காட்டுவதும் உலக இயல்பு. அதேபோல் கனகராயரும் தனது செல்வப்புதல்வி முத்துமலரை மற்றப் பிள்ளைகளிலும் பார்க்க அதிகமாக நேசித்தார் என்பதற்குத் தடையில்லை.

இப்படியாக ஐந்து ஆண்டுகள் கடந்தன. முத்துமலரின் அழகைக்கண்டு எத்தனையோ ஆடவர் அவளை மணக்க முன்வந்தனர். கடைசியில் கனகராயர் தனது சகோதரியின் மகன் குணசீலனுக்கே விவாகம் செய்து கொடுத்தார். குணசீலன் கண்டியில் மாசம் எண்பத்தைந்து ரூபா சம்பளத்தில் உபாத்தியாயராக இருந்தான். அவன் பெயருக்கேற்றுப்போல் குணவானையும் அழகுடனும் விளங்கினன். முத்துமலரும் குணசீலனும் தங்களது இல்லற வாழ்க்கையை அதிக சந்தோஷத்துடன் நடத்தலானார்கள்.

இந்தவிதமாக நாட்கள் வாரங்களாயும் வாரங்கள் மாசங்களாயும், மாசங்கள் வருஷங்களாயும் பதினைந்து வருடங்கள் பறந்தசென்றன. அதற்குள் சாஜசேகரன் என்ற ஓர் ஆண் மகவையும் பன்னிரண்டு வருஷத்துக்குப்பின் சந்திரவதனி என்றொரு பெண்குழந்தையையும் ஈன்றெடுத்தாள். அருங்குணவதியாகிய முத்துமலர், குணசீலனின் சந்தோஷத்திற்கு ஓர் எல்லையுமுண்டோ? தனது

இருகுழந்தைகளையும், தனது மனைவியையும், கண்ணை இமைகாப்பதுபோல் பாதுகாத்து வந்தான்.

குணசீலன் தனது வாழ்நாட்களெல்லாம் சந்தோஷமாகக் களியக்கூடுமென்று நினைத்தான் போலும். "அந்தோ! பரிதாபம்! இந்த மாய உலகில் மானிடர் வாழ்வின் லீலா விநோதங்களை அவன் உணர்ந்தான் இல்லை.

கேவலம் ஓர் மிருகத்தின் ஜீவியம் இந்த உலகில் எவ்வளவு காலம் நிலைக்கக்கூடும் என்பதைத் திட்டமாகச் சொல்லலாம். ஆனால் மனுஷனின் ஆயுளையோ நாம் திட்டமாகக் கூற முடியாது. இன்றைக்கிருந்தாரை, நாளைக் கிருப்பரென்றெண்ணவோ திடமில்லையே.

இப்படியிருக்க மேட்டிமையான கண்களையும், பெருமையானவைகளைப் பேசும் நாவையும், இறுமாப்பான சிந்தையையுமுடைய மனுஷனை வன் தனது வாழ்நாள் ஒரு மிருகத்திலும் கேவலமாக மதிக்கப்படுவதை உணர்ந்தானில்லை. இதுவே மாய்கை உலகம் அல்லது மானிடர் வாழ்வு எனலாம்.

குணசீலனுக்குத் தனது இன்பவாழ்க்கையில் இடிவிழப்போவது தெரியாது. அவன் தனது அருமை மனைவியையும் பிள்ளைகளையும் (மனைவியின் பிரசவத்திற்காக) அவளின் தாய் தந்தையரிடம் அனுப்பியிருந்தான். அங்கே அவளின் பேறு காலமும் நிறைவேறிற்று.

ஆனால் தன்து பெற்றோரையும், பிள்ளைகளையும், நாயகனையும் விட்டுப்பிரிய வேண்டிய காலம் சமீபித்துவிட்டது என்று அவளுக்குத்தெரியாது, பிள்ளை பிறந்த மூன்றும்நாள் அவளுக்கு ஜுரம் கண்டதும் குணசீலனுக் கறிவிக்கப்பட்டது. உடனே அவன் புறப்பட்டு தனது மனைவியின் இருப்பிடம் வந்து சேர்ந்தான். என்செய்வான் பரிதாபம்! தனக்குத் தெரிந்த வயித்திய நிபுணர்களை அழைத்து வந்து காட்டினான். தெய்வசித்தத்தை யாரால் தடுக்கமுடியும்.

தனது அருமை மனைவி தன் பிராணனுக்காக மன்றாடுவதையும், அவளின் பரிதாபமான பார்வையையும் கண்ட குணசீலனும் அவளின் பெற்றோரும், நெருப்பில் விழுந்த புழுவெனத் துடித்தார்கள். எங்கும் சற்று மௌனம்.

"ஆதிமூலமே !....." கடைசியில் இச்சப்தம் சிறிதாக அவளின் வாயில் நின்று வெளிப்பட்டது.

குணசீலன் பிரமித்து நின்றான். உண்மை விளங்கியதே "ஐயோ தெய்வமே! நம்பினவரை நடு ஆற்றில் கைவிட்டாயே!" என்றலறி ஸ்மரணை தப்பி மண்மேல் வீழ்ந்தான்.

ஆண்டாண்டுதோறு மழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ? நாம் இந்தப் பூமியில் பிறந்த அன்று தொடக்கம் மரணம் நம்மை எதிர் பார்த்துநின்றது.

முத்துமலரின் மரணச்சடங்கும் நிறைவேறிற்று. தனது அருமைத் தாயாரின் மரணத்தை எண்ணி எண்ணி ராஜசேகரன் ஏங்கினான். ஆனால் பரிதாபம்! அந்த ஏழைப்பாலகி சந்திரவதனிக்கு ஒன்றுமே புரியவில்லை தனது பாட்டனை, பாட்டி, தகப்பன் முதலியோர், அழுவதைக் கண்டு தானும் அழுவாள். தனது அண்ணனிடம் மெதுவாகச் சென்று, அம்மா எங்கே போட்டா? இனி ஒருக்காலும் வரமாட்டாவா? என்று கேட்பாள். இவளின் பரிதாபமான கேள்விகளையும் மனத்துடிப்பையும் கண்ட அங்குள்ளோரின் கவனம் அதிகரித்தது. கனகராயர் தனது அருமை மகளின் பிரிவால் எங்கமுற்றிருந்தாரெனினும், அவள் விட்டுப்போயிருந்த இரு செல்வக் குழந்தைகளையும் தனது கண்மணிகள்போலப் பாவித்து அவர்கள் மூலமாக மனம் ஆறியிருந்தார்.

குணசீலனும் தனது ஆருயிர் நாயகியின் பிரிவாற்றுமையினால் மூன்றுமாசத்திற்குள் விண்ணுலகேகினான்.

சந்திரவதனிக்கு வயசு ஐந்தாகியதும் தனது தாயார் படித்த கிராமப்பாடசாலையில் கற்றுவந்தாள். கனகராயர் தனது அருமைப் புதல்வியின் பிரிவால் மனம் உடைந்தவராய் தனது உபாத்திமைத் தொழிலை விட்டு உபகாரச்சம்பளத்துடன் இளைப்பாறியிருந்தார்.

அவர் தனது பேரப்பிள்ளைகளைக் கவனிப்பதிலே நேரத்தைச் செலவளிப்பார். இப்படியாக ஏழுவருஷங்கள் சென்றன. ராஜசேகரனும்தனது படிப்பை முடித்து, ஏதாவதொரு தொழில் செய்யவேண்டுமென்னும் விருப்பமுடையவனை, தனது பாட்டனரின் அனுமதியின் பேரில் கொழும்பு நகரஞ் சென்றிருந்தான். அங்கேயுள்ள சில பெரியோர்களின் முயற்சியால், ராஜாங்கத்தில் அவனுக்கு உத்தியோகம் கிடைத்தது. தனது தாய் தந்தையரை நினைந்து கண்ணீர் விடுவான். தனது அருமைச் சகோதரியின் திக்கற்ற நிலைமையை எண்ணிப்புலம்புவான். இவ்வாறுகச் சிலவருஷங்கள் கடந்தன. சந்திரவதனியும் மங்கைப்பருவத்தை அடைந்தாள்.

கனகராயர் தனக்குத் தள்ளாண்மையின் காலம் கிட்டிவிட்டதை உணர்ந்து ராஜசேகரனுக்கு எங்கேயாகிலும் ஓர் உத்தம பெண்ணை விவாகம் செய்விக்க எண்ணினார். இதுவிஷயமாக லீவு எடுத்துவரும்படியும் ஓர் கடிதம் எழுதி

விட்டுக் கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானார்.

ராஜசேகரனும் தனது பாட்டன் பாட்டியின் அந்திய காலத்திற்குப்பின், தனது சகோதரியின் துக்கற்ற நிலைபரத்தை யுன்னி விவாகம் செய்யச் சம்மதித்தான். விவாகச் சடங்குகளும் அதிக ஆடம்பரமாக நடவாமல் அமைதியாக நடந்தது.

ராஜசேகரனின் லீவு முடிவடைந்ததும், தனது பாட்டன் பாட்டியிடம் விடைபெற்றுக்கொண்டு, தனது சகோதரியுடனும், மனைவியுடனும் கொழும்புக்குப் பிரயாணமானான். அங்கே சந்திரவதனியின் சீவியம் சந்தோஷமாக அதிகநாள் நீடிக்கவில்லை. மாய்கை உலகின் இயற்கைத்தேவி அங்கே தாண்டவமாடத் தொடங்கினாள். ராஜசேகரனின் இல்லக்கிழத்தியும் அரசாளத் தலைப்பட்டாள்.

"வாசகர்களே! மனைவியானவள்தானே வீட்டின் தலைவியும் அரசியுமென்பதாக நீங்கள் நினைக்கக்கூடும். அதுவாஸ்தவமே. சாந்தம் என்னும் சிங்காசனத்தில் உட்கார்ந்து, அன்பென்னும் செங்கோல் கரந்தனில் தாங்கி, கற்பென்னும் கிரீடம் சிரமதிலணிந்து, தனது இல்லறம் என்னும் ராட்சியத்தை அரசாள்பவளே இம்மையிலும் மறுமையிலும் பாக்கியசாலியாக விளங்குவாள்.

அப்படிக்கின்றி, அரக்கிகள் போலவும், வேதாளங்கள் போலவும் அரசாளத் தலைப்பட்டால், அப்படிப்பட்டவளின் வீட்டைத் துஷ்டமிருகங்களின் உறைவிடமென்றே சொல்லலாம்:

ராஜசேகரனின் மனைவி சிங்காவல்லியானவள், ஆட்டுத்தோலைப்போர்த்த ஓநாய்போல் வேஷம் பாரியிருந்தாளாயினும், நாட்கள் செல்லச்செல்ல அவளிடம் ஓநாயின் குணமே தலைகாட்டத்தொடங்கிற்று. இதற்கிடையில் தேவகடாக்ஷத்தினால் ஐந்து குட்டிகளையும் ஈன்றெடுத்தாள். ("நேயர்களே! ஓநாயின் குட்டிகளென்று நினைத்துவிடாதீர்கள் அவர்கள் மனுஷக் குழந்தைகளே.)

ஏழைச் சந்திரவதனி என்ன செய்வாள் பரிதாபம்! வீட்டுவேலைகள் முழுவதும் அவளே செய்யலாயிற்று. அத்துடன் பிள்ளைகளுக்கு வேண்டிய அலுவல்களையும் அவளே செய்யலானாள்.

அப்படியிருந்தும் தனது அண்ணியிடம் அவள் கேட்கிறவசைச் சொற்கள் கொஞ்சமல்ல. அது போதாதென்று அடியும் பெற்றாள்

எவ்வளவு அநியாயங்கள் நடந்த போதிலும் தனது அண்ணனிடம் ஒன்றும் சொல்லவே மாட்டாள் சந்திரவதனி.

இராக்காலங்களில் தனது படுக்கையில் படுத்த வண்ணமாக, அன்பிசொரூபியாகிய ஆண்டவனிடம் முறையிடுவாள். "ஆ! ஜெகதீசா எனது தாய் தந்தையருடன்நானும் இறந்திருந்தால் உமது திரு வடிகளிலிருந்து உமக்குச் சேவை புரிவேனே. நான் படும் கஷ்டங்களை நீர் பார்க்கவில்லையா?

தயாநிதியே! கிருபைகூர்ந்து என்னைக் கடாக்ஷித்தருளும். என்று புலம்பியவாறு நித்திராதேவியின் வசமாவாள்.

ராஜசேகரனும் தனது மனைவியின் கொடுமைகளைக் கவனித்தானாயினும், ஒன்றும் பேசமாட்டாது இருதலைக்கொள்ளி எறும்பு போலானான்.

காலச்சக்கரம் சுழன்று கொண்டே வந்தது.

ராஜசேகரன் தனது அருமைச் சகோதரி சந்திரவதனிக்கு எங்காகிலும் ஒரு வரன் தேடி மணம் செய்விக்கத் தீர்மானித்தான்.

திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை.

ரத்தினபுரியில் மாசம் நூற்று ஐம்பது ரூபா வருமானமுள்ள ஓர் வாலிபனை சந்திரவதனிக்கு மணம் செய்வித்தான். சந்திரவதனியும் அவளது கணவன் ஜெயசீலனுடன் ரத்தினபுரிக்குச் செல்லலானாள்.

தனது பிதா மாதாவை இழந்து இவ்வளவு காலமாகத்தான் பட்ட கஷ்டங்களுக்கு, ஈசன் தனக்கு ஒரு நல்வழியைக் காட்டினார் என்பதாக நினைந்து, கடவுளே மனமாரத் துதித்தாள். ஆனால் இந்த மாய உலகின் லீலா விநோதங்கள் அவளுக்குத் தெரியாது. தான் சம்சாரம் என்னும் சங்கிலியினால் பிணைக்கப்பட்டு குடும்பம் என்னும் பாரத்தை இழுக்கவேண்டும் என்பதை உணர்ந்தாளில்லை. தனது நாயகனுடன் விரும்பிய இடம் எல்லாம் செல்லலாம். பட்டாடைகளையும் ஆபரணங்களையும் வேண்டியமட்டும் அணியலாம் என்பதாக மனப்பால் குடித்தாள். சந்திரவதனி பதினாறு வயசுச் சிறுமியானதால் உலக அனுபவம் அவளுக்குத் தெரியாது.

பத்தாவுக்கேற்ற பதிவிரதையாகத் தனது நாயகன் ஜெயசீலனுடன் இல்லற வாழ்க்கையை அதிக சந்தோஷத்துடன் நடத்தலானாள் நமது சந்திரவதனி.

இவ்வுலகில் நாம் எவ்வளவு ஐசுவரிய சம்பன்னர்களாக இருந்த போதிலும், கவலை என்பது சற்றேனுமில்லாமல் ஜீவிக்கமுடியாது என்பது திண்ணம். இதுவும் மாய்கையே.

—ஸரோஜா

பேதமை என்பது மாதர்க்கணிகலம்.

"பேதமை என்பது மாதர்க்கு அணிகலம்" என்னும் இபமுது மொழியானது நம் மூதாதையாகிய ஔவைப பிராட்டியார் அருளிச்செய்த ஆத்திசூடி யிலுள்ள அரும் பெரும் மொழிகளில் இதுவொன்றாகும். இம்முது மொழியைச் சிறு வர்முதல் பெரியோர் அனைவரும் பெண்மணிகளை இழிவுபடுத்தும் கற்பிலா மூடரும் அறிவர். சாதாரணமாகப் பெண்களிடையே ஒருபெண் மற்றொரு பெண்ணைப்பார்த்து "அடியே! உன்பேதமைக் குணத்தைக்காட்டி விட்டாய்" என்று சொல்வது முண்டு. ஆனால் இதன் உண்மைப் பொருளை ஆராயப் புகின் நகைத்தற் கிடமேயாம். யாவர் எவ்விதம் நகைப்பினும் என் சிற்றறிவில் தோன்றியதை என் சகோதரிகளறிய உரைக்க முன் வந்தேன்.

சாதாரணமாக ஆத்திசூடிப் பதவுரைப் புத்தகங்களில் இம்மொழியின் உரையானது:—

"பேதமை" என்பது—அறியாமையானது, "மாதர்க்கு அணிகலம்"—பெண்கட்கு ஆபரணம் போன்றது என அறியாமையை அணிகலனுகவுடைய ஓர் பெண்பால் அருளிய அருள் மொழிக்கு, அறியாமையைக் களைகலனுகவுடைய ஆண்பாலார் உரை எழுதியிருக்கின்றனர். என்னே! ஆண்பாரின் அறிவுடைமை! பெண்பாலார் மாட்டு எத்துணை மதிப்பு! அவர்கட்கு எத்தகைய சிறந்த அணிகலனைத் தந்திருக்கின்றனர்! நம் பெண்பாலாரும் கௌரவமாக அதை ஏற்றுக்கொண்டனர்.

ஒரு நூலுக்கு உரை எழுதப்புகின், அந்நூலின் இயற்றுதல் கர்த்தாவின் கருத்திற்கும் உலகோரின் வழக்கத்திற்கும் ஒட்டியன்றே உரை எழுதுதல் வேண்டும். எனவே ஆத்தி என்னும் நூலை எடுத்துக் கொள்வோம். இவ்வரிய நூலை இயற்றியவர் ஔவைப்பிராட்டியார் என்னும் ஓர் பெண்பாலன்றே? ஓர் தாய் தன்மகளின் புறஉடப்பிற்கு அணிகளைன் கொடுக்க விரும்பின், உபயோகமற்றதும், அருவருக்கத்தக்கதுமான ஓர் ஏலுப்புக் கோர்வையை அணிகலனுக அளிப்பாளா? ஒருக்காலும் அவ்விதம் செய்யமாட்டாள். அங்ஙனமே நம் பெண்சமுக முன்னேற்றத்திற்கே அவதாரமெடுத்த தாயன்ய ஔவை அம்மையார் தம் இனத்தாராகிய பெண்மணிகளின் சுகமெனும் சுக உடம்பிற்கு "அறியாமை" என்னும் ஆபரணத்தை அளிக்க அன்னார் மனம் தான் ஒப்புமோ? இந்நூலிற்கு உரை எழுதியோர் அல்லது இம்முதுமொழிக்கு உரை எழுதியோர் இதன் உட்கருத்தை உணருதல் இன்றியமையாக் கடமைகளில் ஒன்றன்றே? அல்லது தற்காலத்தில் ஆண்பாலார் பெண்களைப் பார்த்து "அடி பெண் பேதாய்" அல்லது "அடி பேதைமை" என்று ஏசுகின்ற நேரங்களில் அதின் உண்மையான பொருளை அறிந்து ஏசுகின்றார்களா என்பது சந்தேகத்திலிருக்கின்றது.

அன்றியும் நகை கட்கு "அணிகலம்" என ஏன் பெயர் வந்தது என ஆராய்வோமானல் பெரும்பாலும் பெண்மணிகள் விசேஷ தினங்களில் தான் முக்கியமாக ஆபரணங்களை அணிவார்கள். மற்ற நேரங்களில் கழற்றி வைத்து விடுவர். மறு படியும் விசேஷகாலம் வர எடுத்து அணியப்படுவதால் நகைகட்கு "அணிகலம்" எனும்பெயர் வழங்கப் படுவது என்பது என் சிற்றறிவு. அதாவது அணிகலம்:—அணிந்த கலம், அணிகின்ற கலம், அணியும் கலம்என முக்காலத்தில் வழங்கும் விணைத்தொகையாய் வந்தது. இதனால் பெண்மணிகட்கு ஆபரணமானது அருமையான பொருள் என்பது விளங்குகின்றது. ஆதலால் அறியாமையாகிய அணிகலனை ஔவைப்பிராட்டியாராகிய ஓர்பெண்பால் தன் பெண் சமுகத்தாரின் அகவுடம்பிற்கு அருமையான அணிகலனுக அருள அன்னார் மனமேனும் ஒப்பிடுமோ என்பதையேனும் அறியாமையைக் களைகலனுகவுடைய ஆண்பாலார் அறியாதது ஆச்சரிய மன்றே?

நிற்க, இலக்கியங்களில் முதன்மையான இராமாயணத்தில், சுந்தர காண்டத்துள் சூளாமணிப் படலத்தில் பன்னிரண்டாம் பாசுரத்தின் கடைசி அடியில் சீதையின் கூற்றுகிய "பெரிய பேதமைச் சின்மதிப் பெண்மையால்" என்னும் அடிக்குப் பொருள் கூறுமிடத்து "பெரிய பேதமை" என்னும் பதத்திற்கு "பெண்மணிகட்கு இயற்கையாக நிறைந்துள்ள அறிடாமை" என எழுதி வைத்திருக்கின்றனர். இன்னும் இதுபோன்ற பெரிய சிறிய இலக்கண இலக்கியங்களில் பெண்பாலரைப் பற்றி வரும் இடங்களிலெல்லாம் இகழ்ச்சியாகவே கூறியிருக்கின்றனர். சாதாரணமாக ஆண்பெண் ஆகிய இருசமுகத்தினருக்கும் உலகவியலில் பெரும்பாலும் சமத்துவமே இல்லை. அதுபோன்றே கல்வியுலகிலும் காரிகையரைக் கடையராக்கினர். இக்காலத்திலேனும் சமத்துவமடைய முயலின், அந்நூல்களிலுள்ளவற்றை எடுத்துக் கூறிப் "பஞ்சத்துக் காண்டியாகாதீர்கள்; பரம்பரை ஆண்டியாக மேயிருங்கள்" என ஏசுகின்ற ஆண்பாலார் எதற்குத்தான் அஞ்சுவர்.

இந்நிலைமையில் பெண்மணிகள் எவ்வகையில் முன்னேற்ற மடைய முடியும்? நிற்க, "பேதமை என்பது மாதர்க்கணிகலம்" என்பதன் பொருளை ஆராய்வோம். ஓர் பெண்மணி பிறந்து தக்க பருவமடையும்வரை தன் தாய் இல்லத்தில் இருக்கின்றாள். தக்கபருவம் அடைந்தபின், ஓர் உலோபியின் செல்வமானது தன் உயிரை விடமேலானதாகக் கருதி அரும்பாடுபட்டு ஈட்டிய அவ்வுலோபிக்குப் பயன்படாது அவன் இறந்தபின் வேறுயாருக்கோ பயன்படுகின்றதோ, அங்ஙனமே தன்னை அருமையாகப் பெற்று, வளர்த்து, நேசித்து, அன்பு பாராட்டிய பெற்றோர் உற்றார் உறவினர் அனைவரினின்றும் நீங்கி, வேறோர் தனக்கு முற்றும் அறிமுக மில்லாப் புதிய இல்லத்தில் புது உறவினருடன் தன் வாழ்நாளைக் கழிக்க வேண்டியவளாகின்றாள். ஆகவே, அப்பெண்மணிக்கு, ஒருவர் மறுமையில் இன்ப மடைய வேண்டின் இம்மையிலேயே, அறம் முதலிய நற்கருமங்கள் செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்வதுபோல், புக்ககத்தில் நல்வாழ்க்கைபை நடத்தப் பிறந்தகத்திலேயே எல்லா அறிவும் புகட்ட அவளைப் பெற்றோர் கடமைப்பட்டிருக்கின்றனர்.

ஓர் பெண் மணியானவள் புக்ககத்தில் இல்லறம் நடத்துங்காலையில் தன் பிறந்தகத்தில் அனுஷ்டித்துவந்த முறைகளனைவற்றையும் மாற்றியும், அம்மாற்றத்தா லேற்படும் துன்பத்தைச் சகித்துக் கொண்டும் பெற்றோர், உற்றார் முதலிய அனைவரின் பிரிவாற்றுமையைச் சகித்துக்கொண்டும், சரியாகப் பழகும் வரைதன் மனத்தை எல்லாரிடத்தும், எல்லாவற்றிலும் சிறிதேனும் சுதந்தரமன்னியில் அடிமையாகவே வைத்துக் கொண்டும், இன்னும் பல சொற் செயல்களிலும் கொள்ளாதவற்றைக் கொண்டும் தள்ளாதவர்றைத் தள்ளியும், தியாக முறையில் தியாகியாகவும் போக முறையில் போகியாகவும் இன்னோரன்ன பல இனிய அரிய குணங்களை உடையவளாயிருக்க வேண்டியவளாகின்றாள்; இருந்தாள்; இருப்பாள். ஆகவே ஒரு பெண்மணிக்கு அறியாமையே இயற்கையாயின் இக்குணங்களை யெல்லாம் எங்ஙன முடையவளாவாள்!

எனவே பெண்கட்குரிய, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய இக்குணம் நான்கினுள் "மடம்" என்னும் குணத்திற்கு, அறிந்தும் அறியாதிருத்தல் எனப் பெரியோர் கூறியுள்ளார்கள். ஆனபடியால் இப்பேதமை என்பதும் எங்ஙனமெனின் ஓர் பெண்மணிக்குப் பிறந்த அகத்தை விடப் புக்ககத்தில் எப்பொழுதும் சுதந்தரபங்கமே. அங்ஙனம் சுதந்தரபங்க மேற்படின் எவ்வளவு அறிந்திருப்பினும் அறியாள் போன்றே தான் இருக்க நேரிடும் அங்ஙனம் அடங்கி யிருப்பினும், ஆபரணங்களாகிய அணிகலனை விசேஷ தினங்களில் அணிந்து மற்ற தினங்களில் களற்றி வைப்பது போல், தன்னை அடக்கி ஆள்வோராகிய அவ்வீட்டிலுள்ள மாமி மைச்சாளாகியோர் ஏதேனும் தகாத நெறியிற் செல்லின் அவர்கட்கு இப்பெண்மணி நன்நெறியை நயமாக எடுத்தோதி அவர்கம் நெறியலா நெறியை அந்நெறி பிறழ்ந்தோனையே உணரச் செய்து மற்ற காலங்களில் வாளாவிருத்தல் பேதமை என்பதின் கருத்து இதுவே. அணிகலன் என்பதும் இதுவே-"பேதமை என்பது மாதர்க் கணிகலம்" என்பதன் கருத்துமாகும்.

—லீலாவதி

பெண்கள் கடமை.

—:o:—

க. சுப்பிரமணியம்.

பரந்த இப்பாருலகின் கண்ணே பல வளங்களாலும் நிரம்பப்பெற்ற நம் பாரதநாடு சிறுபாக மேயாகும். இப்புண்ணிய பூமியில் எத்தனை வீரப்பெண்மணிகள் தங்கள் தீரச்செயல்களை நிலை நாட்டிச்சென்றிருக்கின்றார்கள். அவர்களைத் தெய்வங்களாக வணங்கி வருகின்றோமல்லவா?

ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டில் பெண்களால்தான் ஆகவேண்டும். ஜனத்தொகையில் பாதியாயுள்ள பெண்கள் முன்னேற்றமடைந்தால்தான் தேசமும் முன்னேற்றமடையும். சிறு தேசமான ஜப்பான் முன்னேற்றமடைந்த காரணங்களுள் பெண்கல்வியுமொன்று. அங்கு 100க்கு 90 பெண்கள் படித்தவர்களாய் இருக்கிறார்கள். ஆகவே, பண்டைக்காலத்திலே பாரத நாட்டுப்பெண்கள் ஒப்புயர்வற்ற உன்னத நிலையில் இருந்ததினாற்றான் இத்தேசமும் உன்னத நிலையில் இருந்தது. அவர்கள் கல்வியறிவுடனும், சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும் இன்பமயமான வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அக்காலத்தில் கௌரவமாகவும் நடத்தப்பட

டனர். அவர்களும் பெண், என்ற சொல்லின் மாண்பைக் குறைக்காது பெண்மைக் குணங்களில் வழுவாது நடக்கலானார்.

பெண்களுக்குக் கல்வியறிவு அத்தியாவசிய மெனக் கூறப்புகின், "அவர்கட்குக் கல்வி ஏன் அவசியம், உத்தியோகம் வகித்துப் பொருளீட்டப் போகின்றார்களா?" என்று சிலர் கேட்பார்கள். வேறு சிலர், "அவர்கள் கல்வி கற்றால் வீட்டுவேலைகளொன்றும் பாராது இறுமாப்புடன் இருப்பார்கள்" என்றும் "அடங்கி நடவார்கள்" என்றும் கூறுவார்கள். கல்வி கற்பது அறிவை வளர்க்கும் பொருட்டே. ஆகவே, கல்விகற்ற பெண்மணிகள் தங்கள் கடமைகளைக் கடைப்பிடியார் என்று கூறுவது, பயிரை வேலி மேய்ந்துவிடும் என்று கூறுவதை பொற்கும்.

முறையற்ற கல்விகற்றவர்கள் தங்கள் கடமைகளை யறியாதிருப்பார். ஆடு அதில் ஒரு கடி இதில் ஒரு கடி கடிப்பதுபோல் உலகத்தை ஏமாற்றும் பொருட்டு முறையற்ற கல்விகற்றோரே அறியாமையின் காரணமாக இறுமாப்புற்றுத் தம் கடமைகளைக் கைநழுவ விடுகின்றார்கள். தகுந்த முறையிலும் தாய்மொழியிலும் நன்றுப் பயிற்றப்பட்டோர் ஒரு போதுந் தங்கள் கடமைகளை மறக்க மாட்டார். என்றும் அறிவுக் கல்வியே பிள்ளைகட்குப் பயிற்றல்வேண்டும். பொருளீட்டுங் கல்வி கற்றோர் இடத்து அன்பு நெறி அணுவளவும் கிடையாது. பரநலம் பற்றறுந்தோராகும். அவர்கள் பொருளுக்கே அடிமையாகின்றார்கள். ஆகவே பெண்ணின் பெண்மைக்குணங்கள் விலக, பெண்குறிகொண்ட பேயாய் விளங்குவாள். ஆதலால் உயிருக்கு உறுபயக்கும், உண்மையை உணர்த்தும் மெய்க் கல்வியை—தாய்நாட்டுக்கல்வியை—ஆத்தீகக் கல்வியை—ஆன்மஞானக்கல்வியை ஒவ்வொரு பிள்ளைகட்கும் பயிற்றல்வேண்டும்.

பொதுவாகப் பெண்ணுலகை நோக்கவேண்டுமேயன்றி இரண்டொருவர் குற்றங்கொண்டு பெண்களைக் குறைகூறலாகாது. ஒவ்வொரு பெண்ணிடத்தும் அடக்கம் குடிகொண்டிருத்தல்வேண்டும். அடக்கமென்பது அறிவு விளங்கப் பெற்று அன்பாக ஒத்துநடத்தலே யன்றி, அடிமையுணர்வுடன் அடங்கியிருத்தல் அடக்கமாகாது. சில பெண்கள் அடக்கமென்பது அடிமையுணர்வுடன் அடங்கியிருத்தலே எனத் தப்பான பொருளில் எடுத்துக்கொண்டு தம் வாழ்நாள் முழுவதையும் பாழாக்குகின்றார்கள். எனினும் வேறுசிலர் அடக்கமென்பதின் உண்மைப் பொருள்தெரியாது, மென்மேலும் அடிமை வாழ்க்கைக்கு வழிகாட்டும் அன்னியபாடையில் அடங்காமோகங்கொண்டு, அன்னிய நாட்டு நடையுடைகளைக் கைக்கொண்டு, ஆண், பெண் னென வித்தியாசமின்றிப் பலவித கழியாட்டங் கட்கூடாடுகின்றார்கள். இவ்வகையோர் பெண் ணினத்தைச் சேர்ந்தவராவாரோ?

தேனினுமினிய செந்தமிழிலாகிய பண்டைநூல் களே பெண்களுக்கு அறிவு, அடக்கம், பொறுமை தூயசிந்தை, வீரம் முதலான மேன்மை பெற்ற குணங்கள் அமைவதற்கு முக்கியமானவை; தற் காலத்து அறிஞர்களால் ஆராய்ந்து எழுதப்படும் நூல்களையும் தெரிந்திருத்தல் நலமாகும். அவர் கட்கு "நல்லது இது, தீயது இது" என ஆராய்ந்து துணியத்தக்க அறிவுவேண்டும். புத்தகங்களை வாசிப்பதோடு நில்லாது எல்லாவிதக் கல்வியிலும் விளக்கமிருத்தல் நலமாகும். அத்துடன் மனத்தை அடக்கியாளும் முறைபைக் கைக்கொள்ளவேண் டும். பார்த்தோர் கண்களைக் கவரத்தக்க ஓவியம், தையல், பின்னல் முதலிய வற்றில் தேர்ச்சியடைந்திருத்தல் இன்றியமையாததாகும். இவை களும் துண்ணறிவை வளர்ப்பவைகளாகும்.

பெண்கள் பிள்ளைகட்குச் செய்யுந்தொண் டே எல்லாவற்றிலும் தலைசிறந்ததாகும். பெண் களே பிள்ளைகளின் பிற்கால சீவியத்திற்கு முலா தாரமாயுள்ள அடிப்படை கோலிவைப்பவர்களா வார். இன்று சர்வாதிகாரிகளாகவும், மந்திரிக ளாகவும், சேனைத் தலைவர்களாகவும், விஞ்ஞான சாஸ்திரிகளாகவும் மற்றும் அனேக தேசத்தொண்டு செய்வோர்களுமாயுள்ள வீரர்க ளெல்லோருந் தாய்வயிற்றில் பிறந்த பிள்ளைகளேயாவர். இவர்களெல்லோரும் இவ்விதஉன்னதபதவியை அடைவதற்குக்காரணமாய் நின்றது இவர்கள் தாய்மாரின் அறிவும் ஆற்றலுமேயாகும். ஆகவே, பெண் கள் பிள்ளைகளை வளர்க்கும் முறைகள் அடங்கிய புத்தகங்களை வாசித்தறிதல் வேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதன் பிரகாரம் பிள்ளைகளின் பிற்கால சீவியத்திற்காகவேண் டியவைகளைச் சிறுவயதிலேயே அவர்கள் மனதில் வேர் ஊன்றச் செய்துவைத்தல் தாய்மாரின் கட மையாகும்.

பெண்கள் வெளியேறிக் கஷ்டத்திற் கூடாகா வண்ணம் வீட்டில் இருந்தே மிகவும் மேன்மை யான தேசத்தொண்டு செய்து நம் நாட்டை உன்னத பதவிக்குக் கொண்டு வருவதற்கு ஓர் வழியுண்டு. அது எவ்விதமெனில், உங்கள் குடும்பங்களில் மாதாந்தம் கிடைக்கும் வரும்படியில் எந்தெந்த நாட்டுப் பொருட்களை வாங்குகின்றீர்களெனக் கணியுங்கள். உற்றுநோக்கின் 100க்கு 99 பங்கும் அன்னிய நாட்டுப் பொருள்களேயாகும் உங்கள் ஆடவர்கள் எவ்வளவோ இம்சப்பட்டும், கஷ்டப்பட்டும், அடிமைப்பட்டும் தேடும் முழுப் பணமும் திரும்பி அன்னிய நாட்டிற்கே போகின

றது. இதனால் நம்நாடு வறுமையாலும், பிணியாலும், பகையாலும் வாடுகின்றது. சகோதரிகாள்! இச்சேவை உங்களால் அன்றி வேறொருவராலும் செய்யமுடியாது. ஆகையால் நந் தாய்நாட்டுப் பொருள்களை ஆதரியுங்கள். அதனால் உங்கள் ஆடவர்கள் கஷ்டப்பட்டுத் தேடும் பணம் நம்நாட்டிலேயே தங்கும், ஆகவே, நம் நாட்டுப் பஞ்சம் பரிதியைக் கண்ட பனிப்போல் பறந்துபோகும்.

அருமைச் சகோதரிகாள்! பெண்கள் கடமையைப் பற்றிஎழுதப் புகின் மிகவிரியும். ஆயினும் முக்கியமான சிலவற்றை மேலே கூறியிருக்கின்றேன். வீண்எண்ணங்கட்கும், வீண்பேச்சிற்கும், வீண்டம்பத்திற்கும், வீண் இறுமாப்பிற்கும், இடங்கொடாமல் உயர்ந்த எண்ணங்களுடன் உங்கள் கடமைகளைச் செய்யுங்கள். அடக்கம் அன்பு, பொறுமை, பரநலம், வீரம் முதலான பெண்மைக் குணங்களுடன் நின்று தொண்டு புரியுங்கள். சிறு சிறு வேற்றுமைகளைப் பாராட்டாது சகோதர உணர்வுடனும் சமரச நோக்கத்துடனும் ஆற்றலுறுதலே நலம்.

எலுமிச்சம் பழம்

—:o:—

எலுமிச்சம் பழந் தெரியாத தமிழர்கள் இல்லை யென்றே சொல்லலாம். இது எப்பொழுதும் கிடைக்கக்கூடிய பழம். எழைமுதல் பணக்காரர் வரை வாங்கி உபயோகிக்கக் கூடிய மலிவான பழம். ஆனால் அதன் குணங்கள் பல. அதிற் சிலவற்றைப்பற்றி எழுதுகின்றேன்.

இந்துக்கள் தங்கள் தெய்வங்களை வழிபடுங் காரியங்களில் எலுமிச்சம் பழத்தை பல வழிகளில் உபயோகிக்கின்றனர். சுப்பிரமணியக் கடவுளின் வேலாயுதத்திலும், சூலங்களிலும், எலுமிச்சம் பழங்களை குத்திவைத்திருப்பதாக சிலர் சொல்லுகின்றனர். எலுமிச்சம் பழம் பல வியாதிகளை குணமாக்குஞ் சக்திவாய்ந்தது. தொண்டையில் புண் ஏற்பட்டால் எலுமிச்சபழச்சாற்றை வாயில் ஊற்றி கொப்பளிக்க வேண்டும். குரல்வளையில் வரும் நோய்களுக்கு தேனையும், பழச்சாற்றையும் சரிபாதி பெடுத்து ஒரு மேசைக்கரண்டி (Table-spoon) வீதம் ஒரு நாளைக்கு இரண்டு வேளை சாப்பிட்டால் குணம் ஏற்படும். நாம் சமைக்கும் கறிகளில் எலுமிச்சம் பழச்சாற்றைப் பிழிந்து சாப்பிட்டால் சாப்பாடு நல்ல வாசனையாகவும், உரிசியாகவும் இருக்கும்.

பழப்புளி சேர்ப்பது தேகத்துக்கு நன்மையான தல்ல. புளிக்கு பதிலாக எலுமிச்சம்பழம் சேர்ப்பது ஆரோக்கியமானது. பித்தசுரங்களுக்கு எலுமிச்சம்பழச் சாறும், இஞ்சிச்சாறும் கொடுத்தால் பித்தம் குணமாகும். தொண்டை கரட்சியாயிருந்தாலும், காய்ச்சலாயிருந்தாலும் பழத்தின் சாற்றை சூடான தண்ணீரில் அருந்த வேண்டும். அநேகர் சாற்றுடன் சீனிசேர்த்து குடிக்கின்றனர். அது அவ்வளவு நல்லதல்ல.

எலுமிச்சம் பழச்சாறு சாப்பிட்டால் மூத்திரப்பை சம்பந்தமான வியாதிகள் நீங்கிவிடும். நமது இடுப்பிலுள்ள சிறிய நீர் தரிக்கும் கருவிகளை சுத்தீகரித்து அவைகள் தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்யும்படி எலுமிச்சம் பழரசம் செய்யவல்லது. அக் கருவிகள் அடிக்கடி சுத்தம் செய்யப்படாவிட்டால் அவைகளிலுள்ள அசுத்தங்கள் இரத்தத்துடன் கலந்து இரத்தங்கெடும். இரத்தங் கெட்டால் வியாதியுண்டாகும். ஆகையால் இரத்தத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள எலுமிச்சம் பழரசம் அடிக்கடி குடித்துவரல்வேண்டும்.

துணிகளிலோ, கைகால்களிலோ, அழுக்குக் கறைகள் ஏற்பட்டால் பழச் சாற்றை அழுக்குப் பட்டஇடத்தில் விட்டு தேய்த்து கொஞ்ச நேரம் ஊறவைத்துத் தண்ணீர் விட்டுக் கழுவினால் எவ்வித அழுக்கும் மறைந்துபோகும்.

அநேக நாளாகப் பாவிக்காமல் உள்ளே கிடந்த பாத்திரங்களை எலுமிச்சபழ மூடிகளால் தேய்த்து ஊறவைத்து துலக்கினால் பள பள என்று மினுங்கும். வெய்யில் காலங்களில் இதன் சாற்றையும் சர்க்கரையையும் குளிர்ந்த ஜலத்தில் கலந்து குடித்தால் மனதுக்குந் தேகத்துக்கும் ரம்மியமாயிருக்கும். இதை ஷர்பத் செய்து சாப்பிட்டால் மிகவும் நல்லது. எலுமிச்சம் பழத்தை பலவிதமாக ஊறுகாய் போட்டுச் சாப்பிடலாம்.

இப்பழத்தில் கல்லியம் (Calcium) என்ற சத்து அதிகம் இருக்கிறது. இச் சத்து பற்களுக்கும் எலும்புகட்கும் உறுதியாயிருப்பதற்கு பயன் படும். மெக்னிஷியமும் (Magnesium) இருப்பதால் பல் ஈறுகளைப் பலப்படுத்தும் சக்தியுள்ளதாயிருக்கிறது. இப்பழத்தில் பிறோட்டின் சத்தும் அதிகம் இல்லை என்று சிலர் எண்ணுகிறார்கள். அவ்விதம் எண்ணுவது தவறு இப்பழத்தில் ஒருவருக்கு தேவையான பிறோட்டின் சத்தும் கொழுப்பும் இருக்கிறது.

ஆகவே, சகோதரிகளே, இவ்வழவு பிரயோசனமுள்ள எலுமிசசம் பழத்தை பயன் படுத்தி நன்மை அடையும்படி உங்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

(மிஸ். T. R.)

மாமியின் புத்திமதி

(முற்றொடர்)

மாமியை தனநாட்களாகக் காணவில்லை பார்த்து வரலாமென எதிர்வீட்டு மீனுடன் போனேன். மாமி குழந்தையொன்றைப் படுக்க வைத்துப்போட்டுப் பக்கலிலிருந்து ஏதோ கிழிந்தபுடவை தைத்துக்கொண்டிருந்தா. எங்களைக் கண்டவுடன் உட்காரும்படி உபசரித்த பின் "ஏதடியம்மா இவ்வளவிலாவது மனந்திரும்பி இப்பக்கம் வந்தாயே. அவ்வளவும் போதும்" என்றார்.

நான்: ஏன் மாமி அப்படிச் சொல்கிறீர்கள் நான்தானே கடைசியாய் இங்கே வந்தவள். நீங்கள்தான் அதன்பின் என்வீட்டுக்கு வரவில்லை ஆனபடியால் நானும் இவ்விடம் வாவில்லை.

மாமி: ஐயோடியம்மா இவ்வளவா உன் புத்தி? ஒருவர் மற்றவரைச் சந்திப்பது சந்தோஷத்திற்கும், சிநேகத்திற்கும் ஒற்றுமைக்கும், நல்லமைக்குமல்லவா? அதுவிட்டு கட்டாயத்திற்குப்போய்க் கொண்டாட வேணுமா அப்படியானால் எனது வேலைகளை கடமைகளை விட்டுப்போட்டு முறை தவறாமல் ஒவ்வொருவர் வீடுகளுக்கும் போய் கொண்டிருந்தால் எனது கடமைகளைச் செய்வது யார். போக வேண்டி நேரிட்டால் தினமும் போவேன் அதைப்பற்றி எனக்குக் குறைச்சலில்லை.

நான்: போக வேண்டி நேரிட்டாலா? அதெப்படி நேரிடும்?

மாமி: உனக்கு சுகமில்லையென்று வைத்துக் கொள் அப்போ உனக்கு ஏதாவது சீர உதவி வேண்டியிருந்தால் தினமும் வருவேன்.

நான்: அப்போ மாத்திரம் உங்களுக்கு வீட்டுக் கடமைகளில்லையோ?

மாமி: கடமை சீவியகாலம் முழுவதும்தான் உண்டு. மனுஷ சென்மம் எடுத்தவர்கள் பிறர் ஆபத்துக்கு உதவாவிட்டால் அதில் பலனில்லை. ஆனபடியால் வீட்டுக்கடமைகளுடன் அதையும் செய்யவேணும். அல்லது வீட்டுவேலைகளில் சிலதைக் குறைத்துக்கொள்ளலாம்.

நான்: எதைத்தான் குறைக்கிறது? எல்லாந்தான் செய்யவேணும். சமயலை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் எபபடித்தான் குறைக்கமுடியும். இரண்டுகறி, ஒரு குழப்பு, ஒரு பொரியல் ஒரு பச்சடி, ரசம் இல்லாவிட்டால் இவர் மேசைக்கே போகமாட்டார் பொரலும் புறு புறுப்பார்.

மாமி: உன்னால் குறைக்கமுடியாத சமயலைக் குறைத்துத்தான் நான் நேரமெடுப்பேன். நாலுக்கும் நாலுசட்டி தேடாமல் ஒன்றாக வைப்பேன். இப்போபார் இவனுக்கு மூன்றுநாட்களாய்க் காச்சல். உன்னைப்போல் நாலு ஐந்து கறிவைக்க முடியுமா? ஒரு கறியும் ஒரு சாம்பாருமாச்சு. எல்லோரும் சந்தோஷமாகத்தான் சாப்பிட்டுப் போகிறார்கள். இடைக்கிடை இப்படியுமிருந்தால்தான் சாப்பாட்டில் விருப்பமிருக்கும் அதை விட்டு தினம் கணக்குப்பிரகாரம் சமைத்தால் பிள்ளைக்கு—ஏன் பெரியவர்களுக்குந்தான் அலுத்துப்போகும்.

நான்: என்னமாமி குழந்தைக்குக் காச்சல் வந்து மூன்றுநாளாச்சா? யார் வைத்தியன்?

மாமி: வைத்தியனை ஏன்? நான்தானே வேண்டியது செய்கிறேன். என்னால் முடியாவிட்டால் அதற்குமேல் வைத்தியனைப்பற்றி யோசிப்போம்.

நான்: என்னமாமி பிள்ளையின் வருத்தம் விளையாட்டா? நெஞ்சில் குளிர் பிடித்தால் என்ன செய்கிறது? இதற்கெல்லாம் வைத்தியனுக்குக் காட்டவேண்டாமா? ஐயோ மாமி எனக்கென்னமோ நெஞ்சிடிக்கிறது! நீங்கள் ஆறுதலாயிருந்து தைக்கிறீர்கள். அதுக்கும் கிழிந்த துணி

மாமி: என்னடியம்மா பூச்சாண்டி காட்டுகிறாய். குழந்தைக்குக் காச்சல்தான் என் தாயார் செய்ததுபோல் நானும் குடிநீர் போட்டுக்கொடுத்தேன். நெஞ்சுக்குக் கற்பூரத் தைலம் பூசி படுக்கவைத்து பக்கலிலிருந்து கவனிக்கிறேன். காச்சலும் குறைந்துதான் இருக்கிறது. தடிமன் காச்சல்தானே இதற்குமேல் வைத்தியனால் என்ன செய்யமுடியும். ஏதோ வருவார் மருந்தை எழுதிக்கொடுப்பார். செய்யவேண்டியதைச் சொல்வார். நேரந்தவறாது மருந்தோ ஆகாரமோ கொடுக்கவேண்டியவள் நானல்லவா? எதற்கும் அனுபோகம் வேண்டும்.

நான்: அனுபோக மென்றால் என்ன? எப்படி அனுபோகப் படுவது?

மாமி: பத்திரிகைகளில் அனுபோகப்பட்டவர்களால் எழுதப்படும் முறைகளைப் பின்பற்றிச் செய்தோ, அல்லது தாய், பாட்டி, மாமி, மற்றும் அனுபோகப்பட்டவர்கள் செய்வதைப்பார்த்தோ, அனுபோகப்படலாம். இன்னும் மானிட மர்ம

சாப்திரம், ஆனந்தபோதினி, முதலிய எத்தனையோ பத்திரிகைகள் குடிநீர் முறைகளை விளக்குகின்றன. இவைகளை வாசித்துப்போட்டு விடாமல் செப்துபார்த்து அனுபோகப்படலாம். அப்போதான் வாசித்ததால் நன்மை அடையலாம்.

நான்: நீங்கள் எப்படி அனுபோகப்பட்டீர்கள்?

மாமி: நான் கண்டும், கேட்டும், வாசித்தும் தான் அனுபோகப்பட்டேன். எங்கள் அம்மா எங்களுக்குத் தடிமன் காச்சல் வந்தால் குடிநீர் தான் போட்டுக்கொடுப்பா. மூன்றுநாள் பார்த்து காச்சல் குறையாவிட்டால்தான் வைத்தியனைக்கூப்பிடுவா. அந்த மூன்றுநாளும் இலை சாக ஜீரணமாகக்கூடிய சாப்பாடுதான் கொடுப்பா. அதுகும் கணக்குப்பிரகாரம். ஏன் உன்தாய் அப்படிச் செய்வதில்லையா?

நான்: ஓம் மாரி இப்பதான் நினைப்பு வருகிறது ஆச்சி. அந்தக்கூர் இந்தக்கூர் என்று என்னமோ எல்லாம் தேடிக் குடிநீர் வைப்பா. நான் அவை ஒன்றையும் (அப்போ) கவனிக்கவில்லை. இனி இந்த ஊருக்கு வந்ததும் குடிநீர் எண்ணமே இல்லை.

மாமி: ஏண்டியம்மா மீனு உன்தாயார் குடிநீர் போட்டுக்கொடுப்பதில்லையா? (என்று இதுவரையும் பேசாதிருந்த மீனுவைக் கேட்டா) (மீனு சிரித்துப்போட்டு) குடிநீரும் சுடுநீரும், எனக்கு உங்களைப்போல் குழந்தைகளிருந்தால்லவா அந்தக்கவலை. நாங்கள் இரண்டு ஜீவன் ஏதும் வருத்தம் வந்தால் வைத்தியனுக்குக் காட்டுவோம். அவர் ஒரு கலவை கொடுத்தால் போதும்.

மாமி: மீனு அப்படிச் சொல்லாதே. ஒரு கலவைக்கு இரண்டு வெள்ளி வேணும். இனி வைத்தியனை ஒரு முறை வந்து பார்த்துப்போக மூன்றுவெள்ளி வேண்டாமா? குடிநீருக்கென்றால் ஐந்துகாசு போதும். இன்னும் எடுத்தற்கெல்லாம் மருந்தை ஊற்றுவதால் உடம்பும் கெட்டுப்போகும்.

மீனு: என்ன மாமி வைத்தியனை தேள்வையில்லை என்கிறீர்களா?

மாமி: ஐயோடியம்மா அப்படிச் சொல்லாதே. வைத்தியனில்லாவிட்டால் தினம் எத்தனை சாவோ யார் கண்டார். சின்னன் சிறு வருத்தங்களுக்கு வைத்தியன் அவசரமில்லை யென்றல்லவா சொன்னேன். குடும்பப் பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஆரம்ப சிகிச்சை தெரியவேண்டும். தெரிந்திருப்பதால் தனக்கும் பிறருக்கும் நன்மையுண்டு. இதுபற்றி உங்கள் வளிகாட்டியில் ஏன் ஒருவரும் முன்வந்து எழுதவில்லை. எழுதினால் எவ்வளவு நன்மையுண்டு.

மீனு: ஆமாம் அன்றொரு நாள் வழிகாட்டியில லீலாவதி யென்றொருத்தி சமையலாள் வையாதை என்று எழுதுகிறு. யாரோ மாமி சொன்னவாம் அந்த மாமிதான் அப்படிச் செய்கிறுவோ அல்லது மற்றவர்களுக்குப் புத்தி சொல்லுகிறுவோ யார் கண்டார். (தன்னோடு கூட இருக்கும் லீலாதான், லீலாவதியென்றும் அதே மாமியோடு தான் பேசுகிறுளென்பதும் மீனு அறியாள்போலும் ஒருவேளை போகப்போக தெரிந்தாலும் தெரியும்) அவ தனக்கு விருப்பமில்லாவிட்டால், வேலையாள் வைக்கவும வேண்டாம். "வால் இழந்த நரிபோல்" புத்தி சொல்லவும் வேண்டாம். நாங்கள் எங்கள் சுகத்திற்கு சமையலாள் வைத்திருந்தால் பற்றவர்களுக்கு கவலை யென்னத்திற்கு.

மாமி: ஏண்டியம்மா நீ சொல்வதைப் பார்த்தால் நீ கூடச்சமையலாள் வைத்திருக்கிறாய் போலிருக்கே.

நான்: சமையலாள் மாத்திரமல்ல மாமி துணி தோய்க்க ஒரு மனுஷியுமிருக்கிறாள். மீனுவுக்கென்ன செல்லப்பிள்ளை (நான் சொன்னதைக் கேட்டதும் மீனு கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தாள்)

மாமி: மெய்தானே மீனு?

மீனு: சமையல்காறனில்லாமல் என்ன செய்கிறது. விடியமுன் எழும்பி அடுக்களைக்குப் போக என்னால் முடியாது. இனி மத்தியானம் 12 மணிக்கு அவர் சாப்பாட்டுக்கு வந்து விடுவார். நான் தனித்து என்ன செய்கிறது. சமையலாளில்லாவிட்டால் சந்தைக்குப்போவது யார். ஐயோ! இந்தச் சேலையைத் தூக்கி அலச என்னால் முடியாது. அப்படிக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துத்தான் யாருக்கு? குழந்தையா குட்டியா?

மாமி: என்னடியம்மா அப்படிச் சொல்லுகிறுய்! உன்னைப்போல் குழந்தைகளில்லாத சகோதரிகளை நானறிவேன். என்ன மாதிரி தங்கள் வேலையைத் தாங்கள் செய்கிறார்கள். இன்னும், உலகுக்குக் குழந்தைகள் பிறக்காது என்றதை எப்படிக் கண்டு கொண்டாய். இன்னும் ஐந்து, பத்து வருஷத்தில் ஐந்தாறு குழந்தைகள் பிறந்து விட்டால் அப்போ நின்று முளிக்கையிலல்லவா தெரியும். அப்படித்தான் இல்லை யென்று வைத்துக்கொள் நீ சோம்பியிருந்து வேலையாள் வைத்துச் செலவு செய்கிற காசை உனது உற்றார், உறவினர், ஊரவர், சமூகத்தவர், வறியவருக்கும் மற்றும் நன்மையான தொண்டுகளுக்கும் உதவினால் இம்மையில் புகழும், மறுமையில் மோட்சமும், கிட்டும். அது நிற்க; விடிய எழும்ப முடியாது என்கிறாயே. "அதிகாலையில்

தித்திரை விட்டு எழுந்திரு" என்று முதலாம் வகுப்பில் நீ படிக்கவில்லையா ? இரண்டு ஜீவனுக்கு காலைப் பலகாரந் தேடவும், மத்தியானம் 12 மணிக்குமுன் சமைக்கவும் முடியவில்லையா ? வெட்கக் கேட்டை வெளியில் சொல்லாதே. இரண்டு பேருக்கு சமைக்க ஒரு தடியன் ; துணி தோய்க்க ஆள்வேறேயாம். எண்டியம்மா உன் அம்மாளும் அப்படித்தானு? உன் அப்பாவுக்கு என்ன உத்தியோகம் ?

மீனுவுக்கு வெட்கம் வேறு, துக்கம் வேறு தலை நிமிர்ந்து நிலத்தைப் பார்த்தப்படி கால் நிகத்தைச் சுறண்டிக் கொண்டிருந்தவள் சடுதியாய் என்னை நிமிர்ந்து பார்த்து லீலா வீட்டுக்கு வருகிறாயா என்று கேட்டு எழும்பி விட்டாள் மாமி வழி மறித்து பழையபடி உட்காரவைத்து;

மாமி: மீனு நான் உன்னைப் பகைக்கவோ பகிடிபண்ணவோ சொல்லவில்லை. உனது நன்மைக்குத்தான் சொன்னேன். தாய்நாடு விட்டு இந்நாட்டிற்கு வந்த நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாய் இருக்கவேணும். ஒருவர் பிழையை மற்றவர் கண்டித்தால் சந்தோஷப்படுவதைவிட்டுக் கோபிப்பதா? இதோ என்னை நிமிர்ந்து பார். ஏன் அழுகிறாய், உனது கோபத்திற்கும் அழுகைக்கும் பயந்து நீ கெட்டுப்போக விடமாட்டேன். கொஞ்சநேரம் ஆறுதலாயிருந்து நான் சொன்னதை யோசித்துப் பார். அப்போ சரியா பிழையா என்றது விளங்கும். என்று சொல்லி, தைத்து முடிந்த புடவையை வைத்துப போட்டு இன்னுமொன்று எடுத்துத் தைக்கத் தொடங்கிவிட்டா. கொஞ்சநேரம் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை.

தொடரும்.

[ஆனி மாத வழிகாட்டியில் வெளியான மாமியின் புத்திமதிக்கு பத்திராதிபர் எழுதிய குறிப்புரையில் அடுத்த வீட்டு மாமி சகோதரி வீட்டிற்கு போயிருந்த இரண்டு நாட்களும் தன் புருஷனுக்கு சாப்பாட்டிற்கு என்ன வழி செய்துவிட்டுப் போனார்கள் என்ற கேள்வி கேட்டார்கள். இதுபற்றி மாமியை நான் கேட்டபொழுது மாமி சிரித்துப்போட்டு ஏண்டியம்மா நான் ஊர்விட்டு வேறு ஊர் போனேனு? அல்லது புருஷனின் உத்தரவில்லாது தங்கினேனு? எல்லாம் அவரின் விருப்பப்படிதான் நடந்தது. அவர் அங்கேதான் வந்து சாப்பிட்டவர். இரவுக்கு மாத்திரம் வீட்டில் வந்து படுத்துக் கொண்டார் இதில் பிழையில்லையே என்று.]

: : கற்பின் மகிமை : :

பூவுலகத்தில் கடவுளால் படைக்கப்பட்ட ஆண்மாக்களில் மானிட வர்க்கமே மிக்குயர்ந்ததெனவும் இச்சென்மத்தில் தேடிக்கொள்ள வேண்டிய நல்வினைப் பேறுகளைப்பெற இதுவே சிக்கதக்கதெனவும் ஆன்றோறருளியிருக்கின்றனர். மானிடவாழ்வில் பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தவம், துறவறம் என்ற வகைகளுண்டு.

அவைகளில் இல்லறம் என்பது இல்லாளுடன் கூடி ஒருயிர் ஈருடலாயிருந்து நற்குண நற்செய்கையில் நடந்து கடவுட்டிருவடி யடைதலாம். இப்படிப்பட்ட இல்வாழ்க்கையை சிறப்புற நடாத்தி நல்வினைக்கிலக்காகி, நற்கதியடைய கற்புடைய பெண்மூர்களாக யிருக்கவேண்டுமென்பதே.

கற்புடைய மாதர்கள் பிறரை நிந்தியாமலும், ஒழுக்கங்களிற் சிறந்தும் தன்நாயகரை யன்றி மற்றோரை இச்சியாதும், கடவுள் எனக்கருதி அன்புடன் நாயகர்க்குத் தொண்டு செய்தும், சாந்தம், நாணம், மடம், பயிர்ப்பு, துறந்தார்ப்பேணல், விருந்தளித்தல் வறியார் மாட்டருளுடையாதல், சித்தசுகலங்காமை, பக்தி விஸ்வாசம், ஆகிய அநேக நியமங்களுடனும்,

தங்கள் நாயகரினிற் றெய்வம் வேறிலையெனச்
சந்தத நினைத்தவர் சொலைத்
தட்டாது கோபம் வரவொட்டாது தினமவர்ச்
சாற்று பணிவிடைகள் செய்தே
பொங்கமாயவர் குறிப்போந்தொழுகி நித்தலும்
போந்த பெரியோர்க்கருத்திப்
புரிந்த வருளங் களித்திட விருந்தாற்றியிரு
போது நன்னீராடியே
திங்கள் வதனத்திலே தங்கு பொட்டிட்டு மெய்த்
தேசுற வலங்கரித்து
தினமு நாயகனுண்டபின் னுண்டு முன்னேமும்
செல்வி கற்புடையளாவள்

கணவனுங்கினியளாய் மிருதுபாஷியாய் மிக்க
கமலை நிகருபவதியாய்ந்

காய்ச்சின மிலாளுமாய் நோய்பழியி லாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்
மணமிக்க நாண மடமச்சம் பயிர்ப்பென்ன
வருமினிய மார்க்க வதியாய்
மாமிமாமர்க்கிதஞ் செய்பவளுமாய் வாசல்
வருவிருந் தோம்புபவளாய்
இணையின் மகிழ்றன் சொல்வழி நிற்பவளுமாய் வந்தி
என பெயரிலாத வளுமா
யிரதியென வேலீலை புரிபவளுமாய்ப் பிறந்த
மில்வழி செலாத வளுமாய்
அணியிழை பொருந்தி யுண்டாயின வள்கற்பு
டையள்''
(சதகம்.)

''குடநீரட்டுண்ணு மிடுக்கட்பொழுதுய்
கடனீரறவுண்ணுங் கேளீர் வரினுங்
கடனீர்மை கையாறுக் கொள்ளு மடமொழி
மாதர் மனையாட்சியாள்,

''கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா
ளுட்குடையாளூர் காணியல் பிலுளுட்கி
யிடனறிந்தூடி யினிதுணரு
மடமொழி மாதராள் பெண்''
(நாலடியார்)

''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

''சிறைகாக்குங் காப்பெவன் செய்யுமகளிற்
நிறைகாக்குங் காப்பே தலை''

''பெற்றூர் பெறிற்பெறுவர் பெண்டீர் பெருஞ் சிறப்புப்
புத்தேளீர் வாழுமுலகு''
(குறள்)

இவ்வித நற்குண நற்செய்கையுடைய பெண்டிரே இல்வாழ்க்கைக்குரியள். இத்தகைய குணம் வாய்ந்த மங்கையர்கள் முற்காலத்தில் அருந்ததி மண்டோதரி, பதுமகோமளை, தமயந்தி, திரௌபதி, குலசேகரி என்ற நல்லதங்கை, வாசுகியம்மை ஸ்ளாயினி போன்ற அநேக பாதர்கள் கற்புக்கரசிகளாக இருந்து நீண்ட புகழையும், கடவுட்டிருவடியையும், அடைந்துளாரென்பது பல நூலின் கண்யாரு மறயக்கிடக்கின்றது. அவைகளில் வாசுகியம்மையாரை பற்றிச்சில இங்கு குறிப்பிடுவாம் வாசுகியம்மையாரை பொய்யாமொழிப் புலவராகிய திருவள்ளுவ தேவர் விவாக விதிப்படி மணமுடித்த மனைவியார். அவ்வம்மையார் பத்தினிப் பெண்டிர்க்குரிய குணங்களுடனும் தன் நாயகனே கடவுளென்றும் அன்புடன் தொண்டு செய்து கொண்டு உயிருடல் போல் ஒற்றுமையுடன் வாழ்ந்து இல்லறம் நடாத்தி வந்தனர். இவ்வாறிருக்கையில் ஒருவர் அத்திருவள்ளுவ தேவர் சிரகத்தின்கண் அடைந்து இல்லறம் பெரிதோ, துறவறம் பெரிதோ என்னும் ஐயம் அடியேன் இதயத்தில் உதித்தமையால் அச்சந்தேகம் நிவாரணமாமாறு தெளிவித்தருளல் வேண்டும் எனப் பிரார்த்து வெகுநாள் அவர் வீட்டிற்றானே காத்திருந்தனர். அவ்வாறிருந்தும். திருவள்ளுவ தேவர் அவரது சந்தேகந் தெளியுமாறு உத்தரமொன்று மூரைக்காமல் இங்கு நடக்கும் அனுபவங்களாலேயே, அவர் தெளிந்து கொள்வரென்று வாளாவிருந்தனர்.

அந்நாட்களில் ஓர்நாள் தமது மனைவியார் கிணற்றில் நீர் மொண்டு கொண்டிருக்கையில் அவரைத்தமது அருகில் வருமாறழைத்தவுடனே அவ்வம்மையார் பாதிக் கிணற்றளவில் வந்து கொண்டிருந்த குடத்தை அவ்வண்ணமே கயிற்றுடன் விட்டுவர அக்குடமுங் கயிறுடன் பாதிக் கிணற்றிலேயே அந்தரமாய் நின்றதையும் வந்திருந்தவர் கண்டு வியப்புற்றார்.

பின்னொருநாள் அவ்வம்மையார் தனது பர்த்தாவாகிய திருவள்ளுவ தேவருக்குப புராதன திருவமுது (பழைய சாதம்) பரிமாறிக் கொண்டிருக்கையில் என இது சுடுகின்றது என திருவள்ளுவதேவர் திருவாய் மலரக் கேட்ட வாசுகியார் தாமதியாது விசிறி கொண்டு விசுறியதையும் கண்டு வியப்புற்றார்.

வேறொருநாள் பகற்போது நெய்துகொண்டிருந்த திருவள்ளுவ தேவர் திருக்கரத்தினின்றும் சூழல் தவறி விழுந்ததைக் கண்டு தீபங் கொண்டுவா யெனக் கட்டளையிட்டவுடன் ஆசங்கியாது அவ்வாறே கொண்டு வந்ததையும் இல்லறம், துறவறம் என்னும் இரண்டன் மேம்பாட்டிற் சங்கை கொண்டிருந்தவர் அனுபவமாகப் பார்த்து கற்புடையவளாய்க் காதலி வாய்க்கப பெறின் இல்லறமே பெரிதென்றும், அவ்வண்ணம் வாய்க்காவிடத்து, துறவறமே பெரிது என்றும் தமக்குத்தாமே யுணர்ந்து கொண்டு சந்தேகம் நிவாரணமாக்கப் பெற்று திருவள்ளுவ தேவரையும் அம்மையாரையும் மும்முறை வலம் வந்து பணிந்து விடைபெற்றுத் தமதிருப்பிடத்திற்கேகினர். இவ்வண்ணம் இன்னும் அநேக சந்தர்ப்பங்களியற்றி மாபெரும் புகழடைந்து வந்தனர்.

மற்றொரு கற்புக்கரசி சதா காலமும் முருகா, முருகா என்று முருகக் கடவுளின் திவ்ய திருநாமத்தைத் துதித்துக் கொண்டே யிருந்ததை

உண்மையின்னதென்றுணராத அவ்வம்மையின் நாயகர் தப்பிதமான அபிப்பிராயங் கொண்டு தன தில்லிற்குச் சற்று அருகாமையில் வசித்து வரும் முருகன் என்று பெயர் பூண்டுள்ள வாலிபன்மீது தன் மனைவி காதல் கொண்டு காதல் மிகுதியால் அவனை மறக்க முடியாது இவ்விதம் காளடை வில் கூறிக்கொண் வருகிறாள் என்று எண்ணிக் கொண்டு தமது மனமாற்றது சினத்தைக் கொ ண்டு வெளிப்படுத்தாது வரும் காலத்தில், சில நாட் செல்ல அவ்வினை நங்கை பக்தி முதிர்ச்சியால் மேலும் அதிகமாக முருகன் திவ்ய நாமத்தை அடிக்கடி விடாது சொல்லிக் கொண்டும், ஏங்கி, ஏங்கி அழுதுகொண்டும் இருந்ததை மறைவிலி ருந்து கேட்டுக் கொண்டிருந்த அவ்வம்மையின் நாயகர் கோபாவேசமாக இச்சண்டாளியைத் தூலைக்க வேண்டுமென்று கையில் வாளேந்தி வெ ட்டும் பொருட்டு மனைவியிடமோடி வர அவ்வம் மை தனது நாயகரைக் கண்டதும் தனது திருக் கரத்தால் கும்பிட ஏனடி பசப்பி யாரை நினைத் தருகுகிறாய் என்று சொல்லிக் கொண்டே ஓடி வந்து தன் கையிலிருந்த வாளால் அந்நங்கையின் கரத்தைத் துணித்தார். உடனே கை துண்டாகி அப்புறம் விழுந்தும் உதிரம் பெருகியோடவும் கண்டு அதைப் பொருட்படுத்தாது அக்கற்புக் கரசி,

"ஒரு முருகாவென் றென்னுள்ளங்
குளிர உவந்தடனே
வருமுருகா வென்று வாய்வெரு
வாநிற்பக் கை யிங்ஙனே
தருமுருகா வென்றுதான் புலம்பா நிற்பத்
தையன் மூன்னே
திருமுருகாற்றுப் படையுடனே
வருஞ் சேவகனே"

என்று துதித்தும் முருகக் கடவுள் மயிலுடன் தோன்றிக் கடாட்சித்து காட்சியும் முன் வலைய லுடன் பூண்டிருந்த மரதிரியாகவே சையையும் அளித்து காப்பாற்றி முடிவில் முக்தியுமளித்தார். இவ்வற்புதச் செயல்கண்ட நாயகர் உத்தமி யென்றுணர்ந்து இனிதுடன் இல்லறம் நடாத்தினரென்று திருமுருகாற்றுப்படையில் தெற்றெனக் காண்கிறது. நிற்க,

நளச் சக்கிரவர்த்தியின் மனைவியாகிய தமயந்தி யார் தன் நாயகனுடன் இருண்டவனத்தினுள் பாழ் மண்டபத்தில் நித்திரை கொண்டிருந்தவமயம் நளன் தமயந்தியை தனிமையாய் விட்டு கலியின் செயலால் பிரிந்து போயினபின் பொழுது புலர்ந்ததும் எழுந்து நாயகரைக் காணாது மனந் துடித்து அழுது புரண்டெழுந்து அங்குமிங்கும் நாதா, நாதா என்றலறிக்கொண்டு தேடியும் காணாது பயங்கரமான வனத்தில் கல் முள் இவைகளில் வழிக்காக ஓடித் திரிந்தும் ஒரு வழியும் காணாது திகைத்து நிற்கும் நேரம் கலிபுருடன் மாறுருவுடன் எதிரில்வர, ஐயா நான் திக்கற்ற வளாய் வழிதெரியாது திகைக்கிறேன், அடியாளுக்கு அருகாமையிலிருக்கும் நகரத்திற்கு ஏகும் மார்க்கத்தைச் சொல்லவேண்டும், அண்ணல் வென்றடிபணிந்து கேட்ட தமயந்திக்கு, மாற்று ருவந் தாங்கி நிற்கும் கலி புருடன் பெண்ணே நீ என்னிடம் வந்து வாழ்க்கைத் துணைவியாக யி ரு உனக்கு வேண்டிய வசதிகளும், தகுந்த மாடமாளி கை, பொருள் அடிமை, முதலியவைகளையும் அளிப்பேன். ஆதலால் நீயுமென்னுடன் உல்லாச மாகக் காலங் கழிக்கலாம் வீணாக ஏன் இந்த வனத்தில் கல் முட்களில் துன்புறுகிறாய் என்று சொல்லிக் கொண்டே தமயந்தியை பிடிக்க நெருங்கும்போது, இவ்வடாத வார்த்தையைக் கேட்ட தும் மனந் துடித்தும், அக்கசடனுக்கு கூறவேண்டிய புத்திகளைக் கூறியும், மீறித் தன்னைத் தீண்ட வந்தவனிடம அகப்படாது தப்பிக்கும் பொருட்டு ஓடுகின்ற தமயந்தியை மாற்றுருக்கொண்ட கலியனும் பின் தொடர்ந்து ஓடி நெருங்கிப் பிடிக்கப் போகுந்தருவாயில் தன் கற்புக்கிடையூறுமென்று அஞ்சி உடனே சாமபலாகும்படி சபித்தாள். அவ்வண்ணமே சாம்பராயினன்.

மற்றும் சுகேசகரி என்ற நல்ல தங்கை தன் பிள்ளைகளுடன் வனத்திற் செல்லுங் காலை சர்ப் பந் தீண்ட வர அதுகண்டு அஞ்சி அலறியோ தது வேடுவனை மாற்றுருக் கொண்டு வந்த இந்திரன் அப்பாம்பைத் துணித்தெறிந்த பின் தன்னோடு வாழ்க்கைத் துணையாகும்படி அவ்வேடன் பெ ருமிதமாய்ப் புகல அதுகண்ட குலசேகரி அவ் வேடனுக்கு வேண்டிய நற்புத்திகளைக் கூறியும் வேண்டியும் கேளாது, அவ்வேடன் மீறிப்பிடிக்க வணுகும்போது தன் கற்புக்குச் சிதைவுபடுமென் றுகருதி இந்திரனை வேடனைச்சாமபராக்கினள். நளாயினி யென்ற கற்புக்கரசி சூரியன் உதியாதி ருக்கும்படிச் சபித்தாள். கண்ணகி கள்வர்களைக் கல்லாக்கியும், மதுரையைச் சாம்பராக்கியும் செய் தது கற்பின் மகிமையல்லவோ.

பஞ்சபாண்டவர் மனைவி உத்தமியாகிய திரௌ பதியை துரியோதனன் பாண்டவர்கள் தன்னிடம் எல்லாவற்றையும் சூதிலே தோற்று அடிமையான தின்மேல், தன் தம்பியாகிய துச்சாதனனை ஏவி துகிலுரிவித்ததன்றி மேலும் தன் தொடையின் மீது கொண்டுவந்து சோப்பிப்பாய் என்று சொன் னபாத்திரத்தே கடுங்கோபமாகி, தன் கற்பிற் குப் பங்கம் ஏற்படுமெனக் கருதி அவர்களைப் பின் வருமாறு சபித்தாள் அதன்படியே முடிவ டைந்ததுங் கற்பல்லவோ;

(1) "என்ற பொழுதருந்ததிக்கு மெய்தாத
கற்புடையாளிடை யேறுண்ட
வன்றலை வெம்பணிபோல நடுநடுங்கி
மாயோனை மறவாளாகிப்
புன்றொழிலோன் மானிருக்கக் காட்டியதன்
றுடைவழியே புல்வால்குத்தச்
சென்றிடுக வாருயிரென்றவரும் வருவுறச்
சபித்தாடெய்வ மன்னுள்."

(2) "அரச சபையிலெனை யேற்றி யஞ்சாமற்
றுகிறீண்டியளகந் தீண்டி
விரைசெயலி னினம்படிதார் வேந்தரெதிர்
தக்காதெனவே விளம்புவோரைப்
பொருசமரின் முடி துணித்துப் புனலாறு
வெங்குருதி பொழிய வெற்றி
முரசறையும் பொழுதல்லால் விரித்த
குழலினி யெடுத்து முடியேனென்றுள்."

என்றும் இதன் பெருமையை வில்லிப்புத்தூ ராழ்வார் பாரதத்தில், சூதுபோர்ச் சருக்கத்தில் யாவராலும் தெள்ளிதில் அறியக்கூடும். இவ் வாறு அநேக கற்புக்கரசிகள் செய்த புகழும் மகி மைகளும் கணக்கற்றன. மற்றும் சில பத்தினிப் பெண்கள் தமது நாயகனிறந்ததும் பிரிவாற்றாது உடனே மாய்ந்து உடன்கட்டையேறி புகழுடன் கடவுள் திருவடியடைந்தவர்கள் பலர் அவர்களில்

மண்டோதரி

"என்றழைத்தன ளேங்கி யெழுந்தவன்
பொன்றழைத்துப் பொழுவரு மார்பினைத்
தன்றழைக்கைக ளாற்றழுவித்தனி
நின்றழைத்துயிர்த் தாளுயிர் நீங்கினாள்
இராமாயணம் கம்பர்

பதுமகோமளை

"காவன் மன்னவனிறந்தன னெனுமுரை கன்
னத்துள்
மேவுமெல்லியல சனியேறுண்ட வெம்பணியே
போல்
தேவிபாகிய பதுமகோமளை யெனுந்திருமங்கை
ஆவி நீங்கினள் தலையளிபாகிய தத்துவன்றே"

கோப்பெருந்தேவி

"அரிமானேந்திய வமளிமிசை யிருந்த
திருவீழ் மாற்பிற் றென்னவர் கோமான்
தயங்கினர்கோதை தன்னுயிர் பொருஅள்
மயங்கினன் கொல்லென மலரடி வருடித்
தலைதாவெடுமொழி தன்செவி கேளாள்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொருஅள்
மன்னவன் செல்வுழிச் செல்கயான் எனத்
தன்னுயிர் கொண்டவனுயிர் தேடினள் போற்
பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்
தனள்"
சிலப்பதிகாரம் இளங்கோ வடிகள்.

இவ்வண்ணம் பல கற்புடைய மங்கையர்கள் பற்பல விதங்களில் ஆவித்துறந்திருக்கின்றனர். ஆகையால் இப்படிப்பட்ட நாயகன் நாயகிகளாய் இகழ்வதே இல்வாழ்க்கையின் இயல்பும், சிறப் பும்

1) "அன்பு மறனு முடைத்தாயினில் வாழ்க்கை
பண்புமபயனுமது"

(2) "இயல்பினினில் வாழ்க்கை வாழ்பவனென்
முயல் வாருளெல்லாந்தலை" [பான்

(3) "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானு
தெய்வத்துள் வைக்கப்படும்" [றையுந்

வாழ்க்கைத் துணைவி நலமமைந்த கற்புடைய ளாயில் எத்தவத்தாரும் ஈடாகாநிலையும் மகிமையு முண்டாம்.

"தெய்வந் தொழாள் கணவற் தொழுதெழு
பெய்யெனப் பெய்யுமழை" [வாள்
"பெண்ணின் பெருந்தக்கயாவுளகற் பெண்ணுந்
திண்மையுண்டாகப் பெறின்"

பெண்களாகப் பிறந்தவர்கள் இத்தகைய சிறப் பினையடைவதே புகழும் அழகுமாகும் ஆகலால் நம் சகோதரிகள் கல்வி, அறிவு, ஒழுக்கம், பதி பக்தி, கருணை, நகை, சிவகாருணயம், முயற்சி, அன்பு, அறம், முதலிய குணங்களுடன் இல்வாழ் க்கைப் புரிந்து சர்வபாக்கியங்களுடன், கலங்காச் சித்தம, கற்பென்னும், இவைகளையும், கைக்கொ ளள வேண்டு மென்பதே யெனதவா, விரிக்கிற் பெருகு மென்றஞ்சி இத்துடன் விடுத்தனன்.

சி. சிவானந்தம்,
பென்னொங்.

———:0:———

: : சிக்கனம் : :

நாட்டில் எங்குபார்த்தாலும் கஷ்டமாயிருக்கிறது. காசு இருக்கிற இடமே தெரியவில்லை. முன்பு பத்துவெள்ளி ஒருவேளையில் செலவழித்தவன இப்பொழுது இரண்டு வெள்ளி செலவழிப்பதற்கு மூக்கால் அழுகிறான். ஏன் என்று கேட்டால நாலுவருடங்களுக்குமுன் சர்க்கார் அதிகாரிகள் கிறனிமார்களையும் கூலியாளரையும் வேலைநிறுத்தம் செய்ததுவே காரணம்.

எங்குபார்த்தாலும் வேலையில்லாத திண்டாட்டமாக இருக்கிறது. வேலைக்கு மனுஎழுதி அனுப்பினால் மிகவும் சிக்கனமான "நோ வேக்கன்ஸி" பதில் கிடைத்து விடுகிறது. பட்டதாரிகளும், சீனியர், யூனியர், மற்றிக்குலேஷன், பரீட்சை பாஸ்பண்ணியவர்களும் நாட்டில் குவிந்து விட்டனர். சகல பொருட்களும் நாளுக்கு நாள் விலைஏறிக் கொண்டே வருகிறது. ஒவ்வொரு ஜீவனும் இவ்வுலகில் தற்சமயம் மிகச் சிக்கன வாழ்க்கையையே நடத்துகின்றது எனபது தெரியவரும்.

எவ். எம். எஸ். ஆர். (F.M.S.R.) ரெயில்வே என்ஜினை எடுத்துக்கொள்வோம். அது 7, 8, வருடங்களுக்குமுன் கைகாட்டி இறங்கி விட்டால் பூஜைதல்கள் ஊதும். இப்பொழுதோ ஒரு ஊதலுக்குமேல் ஊதக்கூடாதென்று உத்தரவு. ஒரு பாவத்தையும் அறியாத என்ஜினுக்கூட சிக்கனப்போட்டியில் கலந்து கொண்டிருக்கிறது.

டொன் ஐயர் என்ற சாஸ்திரி ஒருவர் மிகவும் சிக்கனமாக நடந்து கொள்ளுகிறார். ஐந்து ஆறு வருடங்களுக்கு முன்பு தர்ப்பனம் முதலிய வைகளுக்கு பத்துப்பதினைந்து தர்ப்பைகளைக் கொடுத்தவருக்கு இப்பொழுது நான்கைந்து தர்ப்பைகளுக்குமேல் கொடுப்பதற்கு மனம் வரவில்லை. மேலும் அவர் மந்திரங்களையெல்லாம் 101 க்கு குறைத்து சிக்கனமாக வைத்திருக்கிறார். கண்டென்ஸ்ட் (Condensed) மந்திரப் புத்தகம் அவரால் எழுதப்பட்டிருக்கிறது. சீக்கிரம் வெளிவரும்.

தையல்முத்து அம்மாள் மிகத் தாராளமான கையுடையவள் என்றுபெயர். சாமான்களை அலக்ஷியமாக வாரி இறைத்து, தான்செய்யும் பதார்த்தங்களை வெகுவிமரிசையாகச் செய்தவள். இப்பொழுதோ சர்க்கரை விலையாக இருக்கிறது. உப்பு மலிந்திருக்கிறது என்று கணக்குப்பார்த்து, சர்க்கரைப் பொங்கலில் உப்பைப்போட்டு மிகச் சிக்கனமாக மாற்றிவிடுகிறாள்." உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்னும பழமொழியை அணுவளவும் தவறாமல் பின்பற்றுபவள் இவள் ஒருத்தியே என்று கூறலாம். கோப்பிக்கொட்டைக்குப் பதிலாக கொத்தமல்லியை உபயோகப்படுத்தி தான் பண்ணும் கோப்பிக்கு "இன்டியன் கோப்பி" என்று பெயரிடுகிறாள். பாத்திரங்களை மினுக்குவதற்கு ஒரு வண்டி மணலையும் ஒரு வீசை புளியையும் உபயோகித்து பாத்திரங்கள் கால் சேரிலிருந்து அரைக்கால்சேர் எடைக்கு மாற்றிய தையல்முத்து அம்மாள் இப்பொழுதோ புளிவீணாகிறதென்று பாத்திரங்களை மினுக்காமலே வைத்துவிடுகிறாள். இவளின் சிக்கனம் எப்படி இருக்கிறதென அறியுங்கள்.

தலைமயிரோ கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து உச்சிக்குடுமி, எவ். ஏ. குடுமி, வாளைக்காய் குடுமி இவையும், அமெரிக்கன் கிறுப்பு, பிரன்சுக்கிறுப்பு, மண்ணுங்கட்டிக் கிறுப்புகளாக மாறிவிட்டது. இதுவும சிக்கனமல்லவா?

ஒருவருக்கொருவர் முன் காலத்தில் "என்ன சுவாமிகள்" என்று சொன்னதிற்குப் பதிலாக என்ன "சார்" என்ற இரண்டே எழுத்துக்களடங்கிய வார்த்தை வந்து விட்டது. பள்ளிக்கூட மாணவர்களும் தங்கள் மூளையில் 3/4 பங்கு குறைத்து 1/4 பங்கையேதான் சிக்கனமாகத் தங்கள் பாடங்களில் உபயோகிக்கிறார்கள் என்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். பழைய காலத்திலிருந்த திடகாத்திர சரீரம் தீர்க்காயுசு முதலியவைகளும் கூட மறையலாயின. இப்படியே ஒவ்வொன்றுந் தங்களுக்குள் சிக்கனம் செய்துகொள்ளுகின்றன.

சிலவருடங்களாக ஒவ்வொருவருடைய திரு நாமதேயங்களுக்குங்கூடச் சனீஸ்வர பகவான் பிடித்துச்கொண்டிருக்கிறார்.

எஸ். பரமேஸ்வரன் என்பவர் ஒருவர் தம் பெயரை எஸ். பீ. எம். வரன் என்று சுருட்டிக் கொள்ளுகிறார். நீலமேகம் என்பவர் ஒருவர் தம் பெயரை என். எம். கம் என்று மாற்றிவிடுகிறார். ஏதாவது பிசின் வேண்டுமென்றால் இவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதே அர்த்தம். மீடியட் என்பவர் தம் பெயரை எம். இடியட் என்று தம்புத்திசாலித்தனத்திற்கேற்ப தம் பெயரை அப்படி வைத்துக்கொண்டார் போலும். பொ. தாமோதரம்பிள்ளை என்பவர் தம் பெயரை பீ. டி. பிள்ளை என்று மாற்றிக்கொண்டார்.

தந்தி ஆபீசில் இவருடைய பெயருக்கு அதிக பணம் கேட்பதே காரணம். இவ்வாறுக பலர் தங்கள் தங்கள் பெயரைக் குறைத்துக் கொள்ளுவதில் மிகவும் சிக்கனமும் ஆர்வமும் கொண்டிருக்கிறார்கள். நாமதேயங்களுக்குக் கூடவா சிக்கனம்? ஆடவரின் நாமதேயங்களைப் பிடித்த சனீஸ்வரன் நற்காலம் பெண்களின் நாமதேயங்களை பிடிக்காமல் விட்டது. பிடித்திருக்கும்பட்சத்தில் ச. மங்கையர்க்கரசி என்ற பெயர் எஸ். எம். கே. அரிசியாகிவிடும், ம. சிவகாமி என்னும் பெயர், எம். எஸ். காமி என மாறிவிடும். க. புவனேஸ்வரி என்பது, கே. பீ. எஸ். வரியாகிவிடும். வே. தங்கலட்சுமி என்பது, வீ. டி. எல். உமியாகிவிடும். பொ சரஸ்வதி என்ற பெயர், பீ. எஸ். வதியாகிவிடும். இப்படியாக சிக்கனம் செய்து கொண்டால் மிகவும் வேடிக்கையாக இருக்கும். எப்படியாவது சிக்கனமாக வாழ்ந்தால் போதும்

—பி. டி. பிள்ளை.

சிரம்பானில் இலங்கைத் தமிழ்ப் பெண்கள் சங்கம்

சென்ற 22-ந் திகதி ஜனவரி மாதம் சனிக்கிழமை பின்னேரம் 5-மணியளவில் சிறம்பானில் இலங்கைத் தமிழ்ப் பெண்கள் சங்கம் ஸ்தாபிக்கும் பொருட்டு ஓர் ஆரம்பக் கூட்டம் கூடப் பட்டது. அவ்வமயம் எண்பது பெண்கள் வரையில் சமுகமளித்தனர்.

கூட்டம் மிஸ் சம்னர் (Miss Sumner) அவர்கள் ஆதரவின்கீழ் கூடப் பட்டதை சிற்றுண்டி தேநீர் விருந்து எல்லாருக்கும் அளித்து உபசரித்தபின், சங்கத்தின் நோக்கத்தை, அக்கிராசனர் விரிவாகவும் தெளிவாகவும் கூறினர்கள். தற்காலம் இலங்கைத் தமிழர்களின் கஷ்டநிலைமையை நிவர்த்திக்கும் விஷயத்தில் தங்கள் சகோதரர்களோடு பாடு பெறுதல் தங்கள்கடமை யென்று அபிப்பிராயங் கூறினர். அப்போர்ப்பட்ட சங்கமொன்று நன்மை பயக்குமென்று சங்கம் ஸ்தாபிக்க எல்லோரும் சம்மதம் கொடுத்தார்கள்.

அதன்பின் மிஸ்ஸ் உவில்லியர்ஸ் அவர்கள் மிஸ்ஸ் தம்பித்துரை அவர்கள் மிஸ்ஸ் சிவகுரு அவர்கள் சமுக முன்னேற்றத்தைப் பற்றி சில குறிப்புரைகள் கூறினர்கள். மிஸ்ஸ் செல்வாத்தினமவர்கள் சங்கம் அனுகூலமடைய ஓர் வாழ்த்துப் பாட்டுப் பாடினர்கள் அதன்பின் பிள்ளைகள் பாட்டுகள் சம்பாஷணைகள் நடந்தன.

சங்கத்தைக் கொண்டு நடத்தும் பொருட்டு, பதினைஞ்சு பேர் அடங்கிய நிர்வாக சபை ஏற்படுத்தப்பட்டது.

அக்கிராசனர் சமுகமளித்த சகோதரிகளுக்கு அன்பு கூறி கூட்டம் எட்டரை மணியளவில் கலைந்தது.

கடிதம். (1)

கனம் பத்திராதிபர் அவர்கள் திவ்ய சமுகத்திற்கு,

ஐயா,

நான் தங்கள் பாலன் வழிகாட்டியை மாதந் தோறும் தவறாமல் வாசித்து வருகிறேன். அதில் வெளிவந்துள்ள பெண்ணுரிமை யென்னும் கட்டுரையைப்பற்றி நம் சகோதரரிருவர் கிடையில் நிகழும் வாக்குவாதங்களையும் கவனித்து வந்தேன். அதில் நம் சகோதரர் தமிழணங்கிற்கு "பெற்றோர் தாமே தம் மக்களுக்கு ஏற்ற வரனைத் தேடிமணம் புரிவதால் விளையும் கேடு என்ன?" என்ற கேள்விக்கு நேர்முறையான பதில் கிடைக்கவில்லையென்று தன் கடிதத்தில் வரைந்துள்ளார். யானும் என் சிற்றறிவிற் கெட்டியவற்றை வரைய எனங்கொண்டேன். நம் சகோதரருடைய கேள்விக்கு "பாலன் வழிகாட்டி" நேயர்களுக்கு எடுத்துரைக்கப் புகுவது கொல்லத்தெருவில் ஊசிகொண்டு விற்கப்புகுவ

தொக்கும். அன்னரைப் புனைந்துரைக் கபபுகுவதும் பொற்குடத்துக்குப் பொட்டிடு வதையொக்கும். அன்னரின் ஆராய்ச்சித்திறம், அறிவின் திட்பம், பொருள்கொள்ளும் பேராற் றல் ஆகியவற்றை இன்னர் வரையும பெண்ணு ரிமைச் சந்தேகக் கட்டுரைகளில் காணுதாரும் கண்டு மகிழாதாருமிலர்.

"பெற்றோர் தாமே தம்மக்களுக்கு ஏற்றவர னைத் தேடி மணம் புரிவிக்கிறார். மணமகளை சௌந்தரியத்திற் குறைவில்லாமலும் கல்வி கேள் விகளிற் கலாவிற்பன்ன ராகவுமிருக்கிறார். ஆனு லொரு கண்குருடு விவாகமான பின்னர் பெண் ணுக்குக் கணவன் மேற்பிடிக்கவில்லை. ஏன்? ஐயோ என் கணவர் குருடரென்று நம்மைப் போலொத்த பெண்களெல்லாம் ஏளனம் செய்கி றார்களே. வெளியில் வெளிக்கிட்டு உலாவ முடி யவில்லையே. என் பெற்றோர்கள் இவ்வகையான இழிவுக்கேற்ற கணவனை யனறோ தேடிவைத்தார் கள் என்று கண்ணீரும் கம்பலையுமாய் ஜீவனுடலை விட்டுப்பிரியும் நாள்வரையிலும் துயரம் விளைத்து இறுதியில் தற்கொலை புரிந்து கொள்வதற்கும் வழிகாட்டும். அதனால் ஒரு பெண்ணினுயிர் அனி யாயமாய்ப் போகின்றதே? ஆனால் ஒரு பெண் அதே குணம் குறியுள்ள ஆடவனை மணந்தபின் யார்ஏழனம் செய்தாலும் அதைக் கவ னியாமல் "கல் என்றாலும் கணவன்" "புல்லென் றாலும் புருஷன்" என்று தம் பத்தியமாய் வாழக்கூடும். இனி விவாகத்துக்குரிய பாத்திரங் கள் மனைவியும் புருஷனும் தாங்களிம்மையில் சந் தோஷத்துடனும் சுகத்துடனும் வாழுவதற்கு பரஸ்பரம் நிர்மலமான அன்பு மிகவு மவசியமா கும்.

பெண்ணும் புருஷனும் பிரேமா பாச பக்தர்க ளாய் நித்தியானந்தத் துடனிருக்கவேண்டு மெனில், தனக்கு அனுரூபமான கணவனைச் சம்பாதிப்பதற்கு ஸ்திரிக்கும், தன் அபிமதானு சாரமாய் நடந்துகொள்ளும் பெண்ணையடைய புருஷனுக்கும் சுதந்தர மிருக்கவேண்டும். இக் காலத்தில் நூற்றிலிருபத்தைந்து குடும்பங்களா கிலும் அனுகூல தம்பத்திய மேற்பட்டிருப்ப தைக் காண்பதரிதாகும். இதற்குக் காரண மென்ன? விவாகமாகாத பெண்களுக்கு விவாக விஷயத்தில் சுதந்தரம் கொடுக்காமல் அவர்க ளின் போஷகர்கள் அந்தப் பாத்தியத்தை வகித்து தங்களிஸ்டானுசாரமாய் நடத்துவதே காரணமாகும்.

மேலும் ஒரு கன்னிகை கல்விகேள் விக்களிற் சிற ந்தும் நவீன நாகரிகத்தைக் கைக்கொண்டும் உல் லாசமாக வாழுகின்றாள் அவளது பெற்றோர் வர னைத்தேடும் முயற்சி செய்யாதிருக்கையில் ஆசை மிகமாய் ஒருவர்வந்து அவளுக்கு விவாகம் செய் துவைப்பதாக சொல்கிறார். போஷகர்கள் மண கனைப் போய்ப்பார்த்து குலம், குணம், நடை, செ ல்வமழகு முதலியவற்றில் சொக்கி விவாகம் செய் துவைக்கிறார்கள். மணமக னெல்லாவற்றிலும் சிற ந்திருந்தாலும் நவீன நாகரிகத்தை முற்றும் வெறு த்தவர். கணவனுக்கு மனைவியின் நவீன நாகரிக நடை பிடிக்கவில்லை. மனைவிக்குப் போதனை செய்கிறார். மனைவியோ சிறுவயதிலிருந்து மண மாகும் வரைக்கும் நவீன நாகரிக இன்பத்திலான ந்தித்துக் கொண்டிருந்தவள் அதை அவள் வெறு க்கமாட்டாள் "தொட்டிலிற் பூண்ட குணம் சுடு காடு மட்டும்" என்னும் வாக்கியத்தைச் சிந்தனை செய்தால் விளங்கும். இந்தத் தம்பதிகள் ஆரம் பத்திலிருந்தே ஒருமைஸ்திரமாயிராமல் பிரதி தினமும் மன விகற்பங்களேற்பட்டு நாளுக்குநாள் பலபட்டு வரலால் இறுதியில்ஒருவர்முகத்தைஒரு வர்பாரதபடி 'தங்கள் மட்டில்தாமே' என்னும்நா க்கமுடையவர்களாகிறார்கள் இகஸுகத்தைஅனு பவித்தற் கேற்றகாலம் வந்தபொழுது ஸ்திரிக ளின் எண்ணங்களை அறியாமலும் இஷ்டத்தை உணராமலும் விவாகம் செய்தால் மேற்சொல்லிய வாறேநடக்கும்.

ஸ்திரி புருஷர்களிற் சிலர் இளமைப் பருவத்தி லிருந்தே ஒரே கலத்திலுண்டு ஒரேயிடத்திற் கல் வியின்று உற்ற வயதடைந்து வருகையில் தம் காதற் கொடியை வளர்த்து தெய்வானு கூலத்தி னால் தம்பதிகளாகிறார்கள். இந்தத் தம்பதிகள் முற்பிறவியில் புரிந்த புண்ணியத்தினளவை வைத் தரைப்பது அரிதாகும். சிறு வயசிலிருந்தே கண வன் குணத்தை மனைவியும் மனைவியின் குணத்தைக் கணவனுமறிந்து கொண்டு மனைவிக் கேற்றப் போல் கணவனும் கணவனுக் கேற்றப்போல் மனை வியும் நடந்து கொண்டு இம்மையிலுள்ளவாணாள் இன்பம் நிறைந்த தாக்கி ஆனந்தமென்னும் கூர சாகரத்தின் அலைகள் மேல் நடனம் புரிவார்கள். அன்பானது பிரபஞ்ச மென்னு முத்தியா வனத் தில் பூத்த நன்மலர் களென்றும் அம்மலர்கள் கோர்த்த மாலையைக் கொண்டு அன்பெ ன்னும் தெய்வத்தை அலங்கரிக்கச் செய்வதே விதியென்று பெண்கள் நினைக்கிறார்களோ அவர் களே அன்பென்னும் தேவியைத் தொழுதவர்க ளாகிறார்கள். அன்பு குறைவதற்கும், துவேஷம் பிறப்பதற்கும் மானிடத் தன்மை நசிப்பதற்கும்

மூலகாரணமானபஹுளை கல்யாணங்கள் பிசாசத் தன்மைவாய்ந்தவைகள் என்றறியக்கடவீர்.

இனி "உண்மையில் தற்காலத்தில் மேல்நாட்டு நாகரிகம்.....குற்ற மென்ன" என்கிறீர். நவீன நாகரிகம் என்றால் என்ன என்பதையவர் நன்குஅறிந்திலர் போலும். அதிலும பெண்கள் நவீன நாகரிக வாழ்வில் பெறக்கூடிய சுதந்தர மென்னவென்பதைப் பெண்கல்வி யென்னும் கட்டுரையில் வாசித்திலர் போலும்.

மூன்றாவதாக சாவித்திரியின் விவாகத்தைப் பெற்றோர்களே பேசிச் செய்தனரென்று என்னால் வாசித்தாரோ? அலது பகற்கனவுதான் கண்டனரோ தெரியவில்லை. சாவித்திரியும் சத்யவானும் ஒரே ரிஷி ஆச்சிரமத்தில் கல்வி பயின்று வருநாளில் சாவித்திரி சத்யவானின் குணம் நடை கல்வி கேள்விகளைக் கண்டு அவன் மேற் காதல் கொண்டனள். அதனைப் படிப்பிற் சிந்தனை குறைந்து காதற் கவலை அதிகரித்து வந்தது. இதை யறிந்த முனிவர் சாவித்திரியை யணுகி அவளுக் கேற்பட்ட கவலையை உரைக்குமாறு கேட்டனர். அவள் தான் சத்யவான் மேற் கொண்ட காதலை எடுத்துரைத்தனள். முனிபுங்கவரிதைப் பெற்றோர்க்கெடுத்துரைத்ததுமல்லாமல் அவன் சகலத்திலும் சிறந்து விளங்குவதும் அற்பஆயுள் படைத்தவனென்றுரைத்தனர். பின்னர் பெற்றோரும் முனி புங்கவரும் சத்யவானைக் காதலிக்க வேண்டாமென்றும் வேறுடவனைக் மணக்கலாமென்று வற்புறுத்தியும் தான் சத்யவானையன்றி வேறொருவரையும் கண்ணெடுத்துப் பாரேனென்று சத்யம் செய்தபடியினால் வேறு வழியின்றிப் பெற்றோர்கள் சத்யவானின் தந்தை கண்ணிரண்டுமிழந்து காட்டில் தவம் செய்யுமிடம் சென்று அவரனுமதி பெற்று மணம் செய்வித்தனரேயன்றி சாவித்திரியினிஷ்டத்தை யறியாமற் செய்தவர்களல்லர்.

முற்பிறப்பை நம்பி வரும் இந்து சமயப் பெண்கள் அதெல்லாம் பூர்வ ஜென்ம கர்ம பலனென்று எண்ணி யாவற்றையும் சகித்து வருவது கண்கூடு என்கிறீர். அவர் கொள்கையின்படிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல கடவுளிருக்கிறார் போலும். அப்படியின்றி ஒரே கடவுள்தான் எல்லாச் சாதியாருக்கும் சமயத்தாருக்குமென்றால் இந்த "பூர்வ ஜென்ம கர்ம பலனென்னும் விதியை இந்து மக்களுக்கு மாத்திரம் கடவுள் கட்டுப்பாடாக விதித்திருக்கிறார்போலும். அவ்வளவு வைராக்கியம் இந்து மக்கள்மேல்தான் என் கொண்டாரோ தெரியவில்லை.

சரி காசு கொடுத்து ஒரு மாட்டை வாங்குகிறேமென்றும் கூற்றுக்கு மாட்டின் கிரயத்தை சொந்தக்காரன் வாங்கித் தன்னிஷ்டத்துக்கு எது விதத்திலோ செலவழிக்கிறானே யன்றி மாட்டுடன் திருப்பிக் கொடுக்கவில்லை. அது போல் பேரம்பேசி ஒரு மனைமகளை வாங்குவதாயிருந்தால் அப்பணம் பெண்ணினுடைய பெற்றோர்க்குச் சொந்தமேயன்றி பெண்ணுக்கும் மணமகனுக்கும் சொந்தமல்ல ஆனபடியினால் தனமாக வாங்கிய பொருளை பெண்ணும் மணமகனுமே மனமொருமித்துத் தங்களிஷ்டம்போல் செலவு செய்கிறார்கள். அப்படிப் பேரம்பேசி வாங்கிய பொருளுடன் பணத்தையும் திருப்பிக் கொடுக்கும் வழக்மெங்கேனுமுண்டோ? ஆகையினால் மணமகனைப் பேரம்பேசி வாங்குவதென்றாற் பொருந்தாது,

இனிப் பெண்ணை புருஷனிறந்துவிடில்..... உருகுகிறாள். அதுவே கற்பு அவ்வளவு கற்பு நிறைந்த பெண்களால் ஏதுதான் செய்ய முடியாத காரியம். தமயந்தியின் கற்பைக் கெடுக்கக் காட்டினில் வந்த வேடன் வெந்து சாம்பராயினன. சீதை தன் கற்பின் மகிமையால் தீக்குழித்தனள். கற்பின் மகிமையால் மூம்மூர்த்திகளையும் குழந்தைகளாக மாற்றிவிட்டவள் அனுசூயையல்லவோ? கற்பின் பெருமையால் சாவித்திரி தன் கணவன் உயிரை மீட்டனள். "பழியிது பாவ மென்று பாக்கிலை பகரத்தக்க" என்ற பாடலினீற்றடியையும் "அழகிலை யென்ற போதென் கற்பனும் அறந்தான்" (பிராட்டியார்).

"தெய்வம் தொழா அள்.....பெய்யு மழை" "தற்காத்துத் தற்கொண்டான்.....சோர்விலாள் பெண்" (திருக்குறள்) என்னும் பாடல்களைப் பார்த்தால் விளங்கும். பண்டைய நாரிமணிகளைப் போல் நம்பெண்களும் திலங்கலாமே. அப்படி இன்றுவரைக்கும் காணேமே. இதிலிருந்து அவர்களது கற்பின் பெருமை சொல்லாமலே விளங்கும்.

வீண்விதண்டாவாதக் கடிதங்களுக்குப் பாலன் வழிகாட்டி இடமளிக்க மாட்டானென்றஞ்சியே இவ்வளவில் முடிக்கிறேன். தயவுசெய்து இதற்கு இடமளித்ததனாலின் நன்றியை என்றும் மறவேன்.

இங்ஙனம்,

உணர்ந்ததை உரைப்போன்,

குண்டாங்.

———:0:———

- கடிதம். (2) -

பத்திராதிப,

ஐயா,

நம்மக்கள் வீடுகடோறுஞ் சென்று சில அரிய, பெரிய விடயங்களைச் சிறு நகையுடன் செப்பும் சிறுவன் வழிகாட்டிக்கு என் சின்மொழிகளையே பின்னும் பன்னிப பன்னிப் பகன்று பாரத்தைக்கூட்ட விருப்புக்கொண்டேனில்லையாயினும் "பெண்ணுரிமை" என்னுந் தலைப்பின் கீழ் வெளிவந்துள்ள என்கட்டுரையில் நம் சகோதரிகளுளொருவர் கொண்டுள்ள தடுமாற்றத்திற்கு யானளித்த பதில்கள் திருப்திபளிக்கக் கூடியன வாயிருந்தும் அவர் இன்னும் ஓர் சில விடயங்களில் வைத்தியங்காணு வாதம் புரிவது கண்டு மௌனஞ் சாதிக்க முடியவில்லை. ஆகையாலது பற்றி இன்னுஞ் சில கூறுவதற்குச் சற்றே இடமளிக்கும்படி தங்களைத் தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தான் காமத்தைக் காதலெனக் கருதியதைச் சகோதரி ஒப்புக்கொண்டும் தன் குற்றத்தை எவ்வளவு தூரம் மறைக்க முயலுகிறாரென்பதிலிருந்து அவரது விளக்கமும், மனோபான்மையும் எத்தகைத்தென்பதை வாசகர்களும் நன்குணர்ந்திருப்பார்களென்பதற் ரையமின்று.

பெற்றோர் பிள்ளைகளின் மணவிடயத்தில் பொறுப்பற்றவர்களென என் கட்டுரையிலிருப்பதாகச் சகோதரி கொள்ளும் சந்தேகத்திற்கு இடமேயில்லை. மணமென்றல் அன்பு முறையில் நிகழவேண்டிய வொன்றென என் கட்டுரையிலும், விடையிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆனல் அது தற்காலம் பொன்னிலும், பொருளிலுமே தங்கியிருக்கிறதென்றல் எவரும் ஒப்புக் கொளவர். சகோதரியுமதை ஒப்புக்கொள்ளாமலில்லை. மணத்துக்கு அடித்தபடியாக வரதட் சணையைப் பற்றிக் குறிப்பிடுவது இதையே சுட்டுகிறது. இம்முறைப்படி ஓர் பெண்ணுக்குப் பெற்றோர் தக்க வரனைத் தேடுவதெப்படிச் சாத்தியமாகும். உதாரணமாக ஓர் பெண் தக்க குணம், கல்வி, ஒழுக்கம், உடல்வன்மை வாய்க்கப்பெற்றிருக்கிறாள். ஆனல் பெற்றோர் பணம் படைத்தோரல்லர். அவர்கள் தம் பிள்ளைக்குத் தக்கவரனைத் தேடுவது சாத்தியமாகுமோ? அத்தடன் தக்க வரனென்றல் பெண்ணின் மனத்திற்கிசைந்தவனுமிருக்க வேண்டும். பெண்கள் தம் விருப்பினைக் கூற அருகதையுடையவர்களென்பதற்கு யானளித்த பதில்கள் சகோதரிக்கும் பூரண திருப்தியை அளித்திருக்கும். இதிலிருந்து பெண்ணின் விருப்பினைக் கேட்கவேண்டியவர் பெற்றோரென்பது தானே புலப்படும். ஆகையால் பெற்றோருக்கும் பிள்ளைகள் மண விடயத்தில் முக்கிய பொறுப்புண்டென்பதற் கையமே யில்லை. தக்க வரனெனனும் பதத்திற்கு என்விடையிற் கூறிய பொருளை நன்குணராமையே பின்னுமவர் அவ்வினை தொடுப்பதின் முக்கிய காரணம். யானவருக்குக் குரைத்தனயாவும் பிறவிக்குருடனுக்குப் பாலின் நிறம் கற்பித்த கதைபோலவே முடிந்துவிட்டது. பொன்னிலும், பொருளிலும் அன்பு பிறக்குமோ? அப்படியானல் லஃதெங்ஙனம்? இவ்விடத்தில் சகோதரிக்கு ஓர் விடயம் கூற விரும்புகிறேன். அதாவது ஓர் நூலிலோ, அன்றிக் கட்டுரையிலோ சில விடங்களில் சற்றே பொருள் வேறுபாடு போற்றோற்றும். ஆனலை முழுவதையுஞ் சேர்த்துப் பொருள் கொண்டால் நன்கு தெளியும். அத்தடுமாற்றத்திற்கு நூலாசிரியரையோவன்றிக் கட்டுரையாளரையோ குற்றத்திற்குள்ளாக்க முயலுதல் அறிவின் பாற்பட்டதன்று.

பண்டைய கற்பரசிகளுள் சீதை இராமனைக் கண்டவுடன் தன்னன்பை அவனிடம் செலுத்திவிட்டதாகவும், சாவித்திரியும் சத்தியவானின் ஆயுசு குறுக்கத்தைப்பற்றி எவ்வளவு கூறியும் கேளாது தன்விருப்புக்கிசைந்தவனையே வரித்தனள். தமயந்தியுமங்ஙனமே. இவையாவுமுலகறியும். தனித்தனி சரித்திர ஆராய்ச்சியுடன் விரிப்பின், பாலன் வழிகாட்டி பகரவும் பின்னிற்பான். ஆனலவர்களின் மணத்திற்குப் பெற்றோரும உறுதுணையாயிருந்து அன்பு வழியில் மணமுடித்து வைத்தனரேயன்றித் தற்காலத்தைப் போல் பொன்னையும், பொருளையும் முக்கியாம்சமாகக் கொண்டனரல்ல. காந்தர்வ விவாகத்தினல் சகுந்தலை அவதியுற்றதாகச் சகோதரி கூறுகிறார். காதலின் சிறப்பு அறியும் ஆற்றலிலார்க்கே அது அங்ஙனம் புலனுகும். காதல் பற்றி என் விடையிற் சில கூறியிருக்கின்றமையால் இங்கேயும் குறிப்பிடவேண்டியதில்லை. ஓர் கால் சகோதரி அச்சரித்திரத்திலிருந்து கற்றுக் கொண்ட படிப்பினை அது போலும்.

"அன்னமாவே மண்ணெடு கிளியே
இல்லிக்குடம் ஆடெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமாணுக்கர்"

என்ற ப்வணந்தி கூற்றுப் பொய்யாகுமோ, "அஃதின்றிக் காதலும், காமமும் என்னவென்பதே அறியாத நம் சகோதரிகளுக்கு அதைப் படிப்பிப்பது விபரீதமாகவன்றே முடியும்" என்று வாய்ப் புளிப்பு மாங்காய்ப் புளிப்பு அறியாமல் இவ்வளவு அதிகம் கூறும் சகோதரியே காதலும் காமமும் அறியாமல் ஐயத்துக் குள்ளானது விந்தையிலும் பெரும் விந்தையே. "ஆதலால் அதற்கடுத்த பண்டைக்காலத்தைப் போல் பெற்றோர் வரன் தேடுவதே மேன்மையும், அபாயமில்லாததும், பழிப்புக் இடமில்லாததுமாகும்" என்கிறார். எந்தச் சரித்திரகாலத்தில் பெற்றோர் பொன்னும், பொருளுங் கொடுத்து வரன்தேடினர்? தற்கால முறைப்படி வரன் தேடியவோர் காலம் ஓர்சரித்திரகாலத்திலுமில்லையென்றே நான் கூறுவேன். சகோதரி அதை மறுப்பாராயின் அதுசுக்காலமெனக் கூறுவாரென்று எதிர்பார்க்கிறேன். உண்மை எவ்வாறுயினும் தான் பிடித்தமுயலுக்கு மூன்றே கால் என்று சாதிக்கும் நோக்கம் கொண்டுபோலும், எல்லாம் கன்மம் என்று நம் சகோதரிகள் கன்னத்திலடித்துக் கொள்ளவேண்டுமென்கிறார். நாம் கொண்ட முறைப் பிசகுக்குக் கன்மத்தின் மேற் பழி சுமத்துதல் புத்தியாகாது. எடுத்ததெற்கெல்லாம் நமக்குத்தான் கன்மமும் விதியும்மா? அங்ஙனமானால் மறு பிறப்பில் நம்பிக்கையில்லாத நாஸ்திக கிறிஸ்தவ சகோதரிகள் என்னத்தின் மேற் பழி போடுவது.

சீதன விடயமாக நாவலாசிரியர்கள் கூறியதையும் நான் ஓர் மேற்கோளாக எடுத்துக் காட்டியும் சகோதரி அதை மனதிற் கொள்ளாது வாங்கியமாடு முட்டவும் வருகுவதென எதேதோ தான் தோன்றித்தனமான சில நொண்டி நியாயங்களைக் கூறுகிறார். ஆகையால் நாவலர் கூற்று அல்லது சகோதரி கூற்று சரி பென்பதை வாசகர்களே முடிவு கட்டட்டும்.

நம் சகோதரிகளே உரிமையிற் குறைந்தவர்களாகவே பாவிக்கிறோமென்று கூறும் ஆண்களுக்குப் பதில் கூறுவது தன்னைப்போன்ற தமிழணங்குக்கு அழகல்லவாம். படைக்களத்தில் ஒப்பாரி வேண்டியதில்லையெனச் சகோதரிக்குத் திடங் கூறுகிறேன். எப்போ அவர் வீண் வாதந் தொடுக்க முனைந்தனரோ தாமறிந்ததைக் கூறி அதை ருசுப் படுத்துவதே முறை.

தாரமிழந்து தவிக்கும் சகோதரிகள் மறுமணம் செய்யச் சம்மதிப்பின் சகோதரரின் ஆதரவு கிட்டுகிறதா என்பதுதான் பெருஞ் சந்தேகம். அச்சிலாக்கியம் ஆடவருக்குக் கிட்டுவதுபோல் அவர்களுக்குக் கிட்டுவதில்லை யென்பது மறுக்கொணு உண்மை. ஆகையாலவர்கள் சகோதரி சொல்வது போலத்தானிருக்க வேண்டும். அதைத் தியாகம் என்று துணிந்து கூற முடியாது. இதிலிருந்து நானவர்களைக் குறைவாய்க் குறிப்பிடுவதாக எட்டுணையும் எண்ணுவதற்கில்லை புருடனை இழந்து மறு விவாகஞ் செய்து கொள்ளாமலிருக்கும் நம் சகோதரிகள் தம் வாழ்வில் எத்தனையோ கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டி நேரிடுவது உண்மையே என்றும் அவர்களுக்கு ஆண்கள் எதேனும் உரிமை வழங்குமாறும் சிபார்சு பண்ணும் சகோதரி என் கட்டுரையின் தலையங்கத்தைத் தீரவே மறந்துவிட்டார் போலும். பெண்ணுரிமை எவ்வழியினும் கடியப்படவில்லையென்று வீண்வாதந் தொடுத்துக் காலத்தை வீணைவிரயஞ் செய்ததுமன்றி வழிகாட்டிக்குச் சுமையுந்தந்த அவர் மனதில் இவ்வுண்மை இப்போதான் வெளியானதோ. அவர் அளிக்கும்படி சிபார்சுபண்ணும் உரிமை நான்கூறும் பிறப்புரிமை யல்லாமல் ஒருவேளை இறப்புரிமை யாயிருக்கலாம். இத்தகைய கேலிக்கிடமான காரணமடிப்புகளும், முன்னுக்குப்பின் முரணான கூற்றுகளும் அறிவாளிகளின் விருப்புக்குரியதன்று. எனகட்டுரையில் ஓரிடத்தில சகோதரி திரித்த திரிப்பொன்று எவ்வழியிற் பொருந்துமென்று நான் கேட்டிருந்தது வாசகர்களுக்கும் ஞாபகமிருக்கும். அதற்கு அவர் மௌனஞ் சாதித்தலேனோ? சகோதரி இன்னும் விருப்பமானால் வாதிக்கலாம். ஆனால் விதிகளை அனுசரித்து விடயத்தோடு வாதிப்பதே விரும்பப்படுவது. கடைசியாக எல்லாவற்றையும் வாசகர்களின் மேன்நோக்கான தீர்புக்குவிட்டு, இவற்றைக்கூற இடமளித்த பத்திராதிபருக்கு என் உளமுவந்த நன்றியைத் தெரிவிக்கும்.

இ. முருகேசு.
சென்றல்.

———:o:———

கடிதம். (3)

கனம் பத்திராதிபர் அவர்களுக்கு,

ஐயா,

சென்ற மாசச் சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருந்தபடி ஒரு பொருட்காட்சிசாலை வருடா வருடம் நடத்தி வந்தால் நமது சகோதரிகளனேகருக்கு நன்மையளிக்கக் கூடுமென்று நினைக்கிறேன்.

நானும் எனது சிநேகிதிகளும் எங்களாலான உதவி செய்யச் சித்தமாக இருக்கிறோம்.

எத்தனையோ ஏழைச் சகோதரிகள் நாகரீகம் நிறைந்த இக்காலத்திலும் அடிமைகள் போல வீட்டில் அடைபட்டிருக்கிறார்கள். அப்படிக்கில்லாமல் அவர்களும் எங்களுடன் சேர்ந்து முன்னுக்கு வந்து உதவிபுரிந்தால் மிகவும் நன்று.

அத்துடன் மற்றும் நன்மையை விரும்பும் சகோதரிகளும் உதவி புரிவார்களென்று நினைக்கின்றேன்.

தயவுசெய்து பொருட்காட்சிசாலை எப்போ வைக்கப் போகின்றீர்கள் என்பதைத் தெரிவித்தால், நாங்கள் கூடிய சீக்கிரம் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

இங்ஙனம்,
காரிலக.

பத்திராதிபர் குறிப்புகள்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை என்ன செய்யலாம் உண்மையாக நித்திரை புரிபவரை எழுப்ப முடியும். ஆனால் நித்திரை போற் கிடப்பவரை எழுப்புவது சாத்தியமான காரியமா? மாமியைப் போன்ற அனுபவசாலிகளின் புத்திமதியை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

* * * *

"கற்பின் மகிமை"யை விரித்துரைத்தல் சுலபமான காரியமல்ல. செங்கோல் மன்னருக்கு ஒன்றும் வேதம் ஓதும் வேதியர்க்கு ஒன்றும் கற்புடைய மங்கையர் கொன்றும் ஆக மாத மும் மாரி பொழிவதாகக் கூறியுள்ளனர் பெரியோர். நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசியுமாப்போல் இவர்களுக்காகப் பெய்யும் மழையினால் உலகம் செழிப்புற்றிருக்கின்றது. என்றால் தப்பாதுமா? இன்னும் விவரிப்பது அனாவசியம்.

வெளியூர்களிலுள்ள நண்பர்களும் ஒத்துவரின் பொருட்காட்சி புது வருஷத்துடன் வைக்கவே எண்ணியுள்ளோம். சகோதர சகோதரிகள் ஆயத்தப்படுத்துவார்களென்றே நம்புகிறோம். தற்சமயம் பொருட்காட்சிக்கு உதவி செய்ய முன் வந்துள்ள சகோதரிகளின் ஆற்றலை மெச்சுகிறோம். எல்லாம் முற்றுனபின் எங்கு வைப்பது என்பதை அறிவிப்போம். சிறுவர்களும் தங்கள் கைவேலைகளைக் காட்டுவதற்கு இடமுண்டு.

* * * *

சிறம்பான் இலங்கைத் தமிழ்ப்பெண்கள் சங்கம்.

முயற்சி உயர்ச்சிதரும் என்ற ஔவைப்பிராட்டியாரின் அருள்மொழிப்படி, மேற்படி சங்கம் இவ்வருடம் தைமாசம் 22-ம் தேதி சிறம்பானில் ஸ்தாபிக்கப்பட்டதறிந்து மிகுந்த சந்தோஷமாகினோம். சகோதரிகள் ஒற்றுமையுடன் அச்சங்கத்தைக் கொண்டு நடத்துவார்களென எதிர் பார்க்கிறோம். இதை முன்மாதிரியாகக்கொண்டு மற்றுமிடங்களில் வசிக்கும் சகோதரிகளும் ஒத்து முழைப்பாராயின் மிக நன்மையாகும்.

* * * *

"தமிழ் நேசன்" ஆசிரியரான ஸ்ரீமான் நரசிம்ம ஐயங்கார் காலஞ் சென்றுவிட்டது உண்மைத் தமிழர் யாவருக்கும் மிகுந்த மனவருத்தத்தை அளித்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. தமிழ் பத்திரிகைகளில் குறைகண்டு பிடிக்கக் காத்திருப்பவரே அனேகர். பத்திரிகைத் தொழில் மகா பயங்கரமானதென்பதை விரோதிகளும் அறிவர். எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களைப் பாராது உலக நிஷ்டூரங்களைப் பொருட்படுத்தாது ஆண்மையுடனும் தீரத்துடனும், தான் எடுத்துக் கொண்ட தொண்டைக் குறைவறப் பூர்த்தியாக்கிய அவரது பராக்கிரமத்தை மெச்சாமலிருக்க முடியவில்லை. வாரப்பதிப்பாய்த் திகழ்ந்த தமிழனை வாரம் இரு முறை மும்முறையாக்கித் தினசரியாக்கி விட்ட அவரது தீரமும் விடாமுயற்சியும் போற்றற்குரியது. அவரது சட உடம்பு மறைந்துவிட்ட போதிலும் அவரது புகழுடம்பு என்றுமழியாது நிலைத்து நிற்கும். அதற்குத் "தமிழ் நேசனே" போதிய சான்று பகரும். அவரது பிரிய பத்தினியாருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம். தமிழுலகிற்கு அருந்தொண்டாற்றிய மகானின் ஆன்மா சாந்தியடைவதற்கு ஈசன் அருள் புரிவானாக.

THE BANK OF MALAYA LIMITED,

INCORPORATED IN F.M.S.

Registered Office:—
No. 2, Foch Avenue,
TELE {PHONE: 3346;
GRAM "PEOPLEBANK"
KUALA LUMPUR.

Branches & Agencies :
COLOMBO, JAFFNA,
KLANG, SEREMBAN, IPOH.

CURRENT ACCOUNT and SAVING FUND ACCOUNTS opened: FIXED DEPOSITS received :-Terms which are liberal may be ascertained on application,

Drafts granted upon and Bill negotiated and collected at JAFFNA and at any of the BRANCHES and AGENCIES.

பாங்க் ஒவ் மலாயா லிமிட்டட்

மலாய் நாட்டில் வசிக்கும் இந்தியா-இலங்கை வாசிகளின் வசதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற இவ்வங்கியில்:—

மிகவும் சொற்ப தொகையுடன் கணக்குத் தொடர்ந்து செக்குவெட்டவோ,
நியாயமான பொறுப்புடன் கொடுக்கல் வாங்கல் செய்யவோ,
இந்திய இலங்கை ஆகிய இடங்களுக்கு சரசமான விலைக்கு உண்டியல்கள் வெட்டவோ,
மாதாந்தசம் நடாத்தி வரும் சல சீட்டில் பங்குபெறவோ,
நம்மவரின் கைத்தொழில், கமத்தொழில், வியாபாரம் முதலியன விருத்திசெய்வதற்கோ,
அந்தியகால ஆறுதலான வாழ்விற்கோ, வேறு பல மனத்தேறுதலுக்கோ இவ்வங்கி உற்ற சிநேகிதனைப்போல உதவிபுரியுமென்பதற்கு, இதில் சேர்ந்து ஒத்துழைத்து பற்றுவரவு செய்துவரும் பல்லாயிரம் நண்பர்கள் அத்தாட்சியாயிருப்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காணலாம்.

கணக்குத் தொடர்ந்துசெக்குவெட்ட விரும்புவோர், விஷயத்தை நேரேவந்து வங்கியின் மானேஜரிடம் எவ்வேளையிலும் பேசிக் கொள்ளலாம்.

D V. KANDIAH, Secretary.